உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஈசுர வழிபாடும், பஞ்சாக்கர விளக்கமும்

இவை

சைவப்பிரசாரகர்

காவித்தண்டலம்-வேதாசல முதலியாரவர்களால்

இயற்றப்பெற்று,

சைவத் திருவாளர்-வித்துவான்

பாரிப்பாக்கம்-கண்ணப்ப முதலியாரவர்கள்

அணிந்துரையுடன்,

சென்னை ந. வே. அப்பாதுரை முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

சென்னை மனோரஞ்சினி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றன.

ஆங்கீரச ஆண்டு கும்பரவி] 1933 [விலை அணா 8

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஈசுர வழிபாடும், பஞ்சாக்கர விளக்கமும்.

இவை
சைவப்பிரசாரகர்
காவித்தண்டலம்-வேதாசல முதலியாரவர்களால்
இயற்றப்பெற்று,
சைவத் திருவாளர்-வித்துவான்
[illegible]-கண்ணப்ப முதலியாரவர்கள்
அணிந்துரையுடன்,
[illegible] க. வே. அப்பாதுரை முதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு
சென்னை மனோரஞ்சினி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றன.

[illegible] ஆண்டு கும்பரவி] [1933

A. No. 30349

ஆசிரியர் கா. வேதாசலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஈசுர வழிபாடும்,
பஞ்சாக்கர விளக்கமும்.

இவை
சைவப்பிரசாரகர்
காவித்தண்டலம்-வேதாசல முதலியாரவர்களால்
இயற்றப்பெற்று,
சைவத் திருவாளர்-வித்துவான்
பாரிப்பாக்கம்-கண்ணப்ப முதலியாரவர்கள்
அணிந்துரையுடன்,
சென்னை ந. வே. அப்பாதுரை முதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு
சென்னை மனோரஞ்சினி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றன.

ஆங்கீரச ஆண்டு கும்பரவி] [1933

A. No. 30349

இப்புத்தகம் கிடைக்குமிடங்கள் :—

(1) வா. ர. பாலசுந்திர முதலியார் அவர்கள்,
145, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

(2) சி. ஜப்புலிங்க முதலியார் அவர்கள்,
2, இராமானுஜ ஐயர் தெரு,
மனோரஞ்சினி அச்சுக்கூடம், சென்னை.

(3) ஆ. துரைவேலு முதலியார் அவர்கள்,
பொற்பந்தல் கிராமம்,
சாலவாக்கம் போஸ்டு, செங்கல்பட்டு.

(4) கா. வேதாசல முதலியார் அவர்கள்,
காவித்தண்டலம், சாலவாக்கம் போஸ்டு, செங்கல்பட்டு.

விஷய அட்டவணை

1. பிறவிப்பேறு (மனிதப்பிறவியின் மேம்பாடுரைத்தல்) ... I
2. பிறவியின் றுக்கம் (பிறவியின் றுக்கம் பெருந் றுக்கமே யெனல்) ... III
3. பொருளால் வருந்துக்கம் (பொய்யாம் பொருளைப் போற்றுதலிழிவெனல்) ... VI
4. மாதரால் வருந் துக்கம் (மாதரால் வரு சுகம் மயக்கெனக் கூறல்) ... VIII
5. புத்திரரால் வருந் துக்கம் (புத்திரராற் பெறும் சுகம் பொய்யெனக் கூறல்) ... X
6. அரதத்தரது சரித்திரம் (அரதத்தரது அருந்தவ முறைத்தல்) ... XIV
7. ஆகாராதிகளில் விருப்புறுமை (ஆகாராதிகளின் இச்சையகற்றெனக் கூறல்) ... XVII
8. சிவாலய அமைப்பு (சிவாலய அமைப்பின் சிரின்னதெனல்) 3
9. சிவாலய தரிசின விதி (சிவாலய தரிசனம் செய்வண்ண மீதெனல்) ... 5
10. அன்பர்பணி (அன்பர்பணியே யரன் பணியாமெனல்) ... 9
11. குருபக்தி (குருபக்தி பெற்றுர் குறைவுற்றிராரெனல்) 14
12. திரிகரண சுத்தியடைதல் (திரிகரணசுத்தியே செய்தவமா மெனல்) ... 15
13. இறைவன் றிருவருட்பேறே சுகம் (இறைவன் றிருவருட்பேறே யிறுதியிற் சுகமெனல்) ... 21

14. இறைவன் றிருவுருவம் (இறைவன் றிருவுருவ
மித்தன்மைத்தெனல்) ... 22
15. தியானத்திருமேனி (தியானத்திருமேனி
யின் செம்மை கிளத்தல்) ... 23
16. கருணைத் திருமேனி (கருணைத் திருமேனியே
கதியளிக்கு மேனியெனல்) ... 24
17. சர்வமத சம்மதம் (சர்வமத சம்மதமே சம
ரசமா மெனல்) ... 25
18. இகபோக நிலைமை (இகபோக நிலைமை யித்
தன்மைத் தெனல்) ... 27
19. சமரசநிலை (சமரசநிலையே சன்மார்க்க
நிலையெனல்) ... 31
20. அவாவே பிறவிக்கேது (அவாவே பிறவிக்
கடிப்படையா மெனல்) ... 34
21. பஞ்சாக்கரமகிமை (பஞ்சாக்கரத்தின்
பான்மை யிதுவெனல்) ... 36
22. பஞ்சாக்கர விளக்கம் (பஞ்சாக்கரத்தின்
பாகுபாடுரைத்தல்) ... 41
23. சங்கிரகம் (சங்கிரகச்சான்றே சாலவு நன்
றெனல்) ... 54

பொருளடக்கம்.

1. பிறவிப்பேறு ... 1
2. ஈசுர வழிபாடு ... 3
3. பஞ்சாக்கர மகிமை ... 37
4. பஞ்சாக்கர விளக்கம் ... 41

உ

திருச்சிற்றம்பலம்.

சென்னைச் சித்தாந்தப்பிரகாச சபைத்தலைவர்

வித்துவான்

பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்கள்

எழுதிய

அணிந்துரை.

உலகின்கட் காணப்படுகின்ற உயிர்கள் எல்லாம், இன்பம் என்னும் ஒரு பொருளையே அவாவிநிற்கின்றதென்பது, நாம் அனைவரும் நன்குணர்ந்த தொன்றும். இவ்வுலகின்கண் ஒரு கணத்தே இன்பமெனக் காணப்படுகின்ற வெல்லாம் மறுகணத்தே துன்பம் பயப்பதொன்று மென்பதும் எப்பாலார்க்கும் ஒப்ப முடிந்ததாம். இங்ஙனம் இவையனைத்தும் நிலைபேறிலவா யழிந்தொழியும் நீர்மைத்தாதலை நன்றாராய்ந்து முடித்த நல்லோர், நம்மாற் காணப்பட்ட இவ்வுலகத்துப் பொருள்களுள் ஒன்றன்றாய், இவைகட்கெல்லாம் அப்பாற்பட்டதாய், இவை தம்முள் எல்லாம் என்றும் ஊடுருவி நிற்பதாய், இவை தம்மை எல்லாம் காத்தும், படைத்தும், கரந்தும் அருள்தரவல்ல கருணையங்கடலாய், அறிவொளிப் பிழம்பாய், அருட்பெரு வெளியாய், ஆனந்த நிரம்பித் ததும்பும் திப்பிய சாகரமாய் விளங்கும் முழுமுதற் செழும் பொருள் ஒன்றே; என்றும் அழியா இன்பநிலைக்களமாய் இலங்குவதாம் எனவும், மற்றதனை

தலைக்கூடி அப்பரமானந்தப் பழிங்கடலுள் புக்கு நின்றினிப்பதே பேரானந்தப் பெருவாழ்வா மெனவும், தம்மருந்தவ உழைப்பின் பெரும்பயனுணர்ந்து 'யாம்பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்னும் கருணை மேலீட்டான் நம்மனோர்க்கு அறுதியிட்டுறுதி கூறினார்கள்.

என்றும் உலாவாப் பேரின்ப ஊற்றாக உள்ள அப்பரங்கருணைத்தடங் கடலைத்தலைக்கூடற் கின்றியமையாப் பெருஞ்சாதனமா யிலங்குவது அன்பொன்றேயாம். இவ்வன்பினையன்றி, எவ்வுயிரும் யாண்டும், எவ்வாற்றானும் இன்பப்பேறெய்துமா றின்று. அன்பே இன்பாம். இன்பமே அன்பாம். அன்பே சிவமாம். 'இன்பமே என்னுடை அன்பே' என்னும் மணிவாசகனாரது திருவாசகம் ஈண்டு ஆழ்ந்து சிந்திக்கற்பாலது.

> அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
> அன்பே சிவமாவ தியாரு மறிகிலார்
> அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
> அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.

எனப்போந்த திருமந்திரம் இதனை இனிதெடுத்து விளக்குமா றறிக.

இவ்வன்பென்பது, குடத்துள் விளக்கும் தடத்துள் வாளும்போல், இதுகா ணன்பென்று தந்து காட்டலாகாததொன்று மெனினும், பரந்து விரிந்து உலகை எல்லாம் தன் வயப்படுத்தி நிற்கும் தன்மைத்தா மென்பது வெள்ளிடைமலையாம்.

இவ்வன்பென்னும் பண்பினாற் பரம் பொருளை நாடுதற்குரிய நெறிகள், பலப்பலவா யொளிர்கின்றன. இவை

களே சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாச மார்க்கம் என்பனவும்; சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவுமாம். இவை தமக்கெல்லாம் அடிப்படையாய் நின்று நிலவுவது, இறைவனது சகள மங்கள அருட்கோல வழிபாடாமென்பது ஒருதலை. இறைவன் உருவம், அருவம், அருவுருவம் ஆகிய முத்திற நிலைகளும், இவை தம்மின் வேறுபட்ட நிலையுமுடையா னென்பது சைவசித்தாந்த மரபாம். இறைவன் தனக்கென ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலனாயினும், நம் கருமேனிகழிக்க வந்த கருணைப் பெருக்கான், அன்பர் நினைந்த வடிவொடு விரைந்து சேரும் ஆயிரநாமத்தருட் டிருமேனி பலவுடையனாய் ஒளிருகின்றான். இதனை உணர்த்தவே,

> ஆகமங்களெங்கேஅறுசமயந்தானெங்கே
> போகங்களெங்கேபுணர்ப்பெங்கே—பாகத்
> தருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
> பெருவடிவை யாரறிவார் பேசு.

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முரு விறந்த
அருமேனி யதுவும் கண்டோம் அருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றேஞ் செப்பிய மூன்று நந்தம்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே.

என்றது போலும் திருவாக்குக்கள் எழுந்தனவாதல் காண்க.

> குறிகளும்அடையாளமும்கோயிலும்
> நெறிகளும்அவர்நின்றதோர்நேர்மையும்
> அறியவாயிரம்ஆரணமோதினும்
> பொறியிலீர்நீர்என்கொல்புகாததே.

என எழுந்த தாண்டகச் சதுரரது திருவாக்கும், இச் சகள மங்கள அருட்கோல வழிபாட்டினைப் பெரிதும் வற்புறுத்தி நிற்கின்றது. சுத்த சன்மார்க்க நித்தியானுபவம் கைவரப் பெற்ற வித்தக ஞானிகட்கும், சகளமங்கள அருட்கோல வழிபாடுண்டென்பது சைவசித்தாந்த நான்முடிபாம்.

'அயரா வன்பின் அரன்கழல் அணைந்த' முத்தர்க்குச் சிவன் முத்திநிலைக்கண் அவ்வறிவிச்சைச் செயல்கள் ஒரோவழி புறத்தே சேறலும் உண்மையின், அவை செல்லுமிடமிவை என்பது உணர்த்து முகத்தானே, வாக்கு மனாதீதமாய் அயராவன்பின் அணைந்து வழிபடநின்ற முதல்வனை, வாக்கு மனக்கோசரமாம்படி' தெளியக் கண்டு வழிபடுதல் கூறுவதே.

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

என்னும் சிவஞானபோத முழுமுதல் ஞானநூலின் இறுதிச் சூத்திரமாம்.

இனி, இங்ஙனம் துன்ப நீக்கமும், இன்ப ஆக்கமும் விழைந்து, இன்ப சாகரமாக விளங்கும் இறைவனை வழிபடுவார்க்கு, அவ்வின்பப் பொருளே கருக்கொண்டு விளங்கும் அவன் தன் திருப்பெயரொடும் அவனை நினைந்து நினைந்துருகுதலே செயற்பாலதாம் உண்மைச் சாதனமாம்.

படிகம்போல அதுவதுவாமியல்புடைய ஆன்மா, எவ்வெம்மந்திரங்களைக் கணிப்பினும், அவ்வம்மந்திர சொரூபியாவான் என்பது யாவராலும் உணரப்பட்ட உண்மையா

மாகலான், 'பிறப்பென்னும் பேதமை நீங்கிச் சிறப்பென்னும் செம்பொருள்கண்டு' பேரின்பானுபவம் எய்த விழையும் மக்கள் ஒவ்வொருவரும், அவன் தன் திருநாமமாம் திருமந்திரத்தா லவனை நினைந்து நினைந்துருகிச் சிவோகம் பாவனையில், நிற்கற் பாலராவர்.

'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பது'

'நானே யோதவஞ் செய்தேன் சிவாயநமவெனப் பெற்றேன்.'

என்றது போலும் திருவாக்குகள் அவன் தன் திருநாமமாம் திருவைந்தெழுத்தின் உண்மைச் சிறப்பினை உணர்த்துதற்பொருட்டே எழுந்தனவாம்.

இங்ஙனம் அறவும் சிறந்த இப்பொருட் பகுதியினைத் தன்னகங்கொண்ட 'ஈசுர வழிபாடு' என்னும் இந்நூல் எம்கெழுதகை நண்பரும், சைவதவ ஒழுக்க மிக்குடையாருமாம் காவித்தண்டலம், **திரு. வேதாசல முதலியார் அவர்களால்**, மந்ததர பக்குவ முடையார்க்கும் பயன்படுமாறு, பன்னூற் பிரமாணங் காட்டி பௌராணி மதச்சார் பொடும் இனிது விளக்கி எழுதப்பட்டதாம். இறையன்பின்பாற்பட்ட இதனை இதுபோழ்து இயற்றி வெளியிட்ட இவர்கள், சில்லாண்டுகட்குமுன், உயிரன்பின் ஒரு பகுதியாய சிவகாருணிய விளக்க மென்னும் ஒரு நூலை இயற்றி உலகிற்குப் பெரிதும் உதவி புரிந்திருக்கின்றார்கள். இன்னுமிவர்கள் 'ஒன்றாக நல்லது கொல்லாமை' எனச் சிறந்தெடுத்தோதப் பெற்ற, உயிர்க்கருணை நல்லறத்தை யாண்டும் பரப்புமாறு சொற்பொழிவாற்றுதலே முதற்கடமையாகக் கொண்ட, உண்மைச் சைவராவார். இவர் தமது திருத்தொண்டின்

பயனாக, இவர்கள் ஊரைச்சார்ந்த அயலூர் பலவும், பலி முதலிய மறச்செயலினீங்கி சைவ அறச் செயலின் ஓங்கி விளங்குகின்றன. இத்துணை உண்மைச் சைவாபிமான் மிக்க இவர்கள் மக்களாய்ப் பிறந்த மன்னுயிரெல்லாம் 'சிவனெனு நாமம் தனக்கேவுடைய செம்மேனி எம்மான்' திருவடியன்பிற் றிளைத்தல் வேண்டு மென்னும் உண்மையன்பான் வெளிவருமிதனைச் சைவ உலக மன்பொடு மேற்று இன்பமெய்துமாறு இறைவன்திருவருளை இறைஞ்சுகின்றேம்.

திங்களுலாம் செஞ்சடையான் திருவளரும்
பூங்கமலச் சேவ டிக்கே
துங்கமிகு பேரன்பு துதைந்தொளிர்வே
தாசலனும் தூய்மை மிக்கோன்
சங்கையிலா தீச்சுவர வழிபாடென்
றொருநூலைச் சதுரி னாக்கி
இங்களித்தே மகிழ்வித்தான் இருநிலத்தில்
இவனன்பிற் கிணைகா ணேமால்
கந்தமிகு கொன்றைவளர் கண்ணுதலோன்
அடிக்கமலங் கருத்தி னேங்கச்
சந்ததமார் அருள்பொழியு மைந்தெழுத்தின்
தனிச்சிறப்பைச் தகவி னேடும்
எந்தைபிரான் அடிகளிலே சேர்ந்தினிக்கு
மெழில்ததும்ப வெடுத்துரைத்தான்
சிந்தைவளர் நற்றவத்துத் திருக்கிளர்வே
தாசலன்தான் சிறக்க மாதோ.

'நாவரசர் நிலையம்.' **பா. கண்ணப்ப முதலியார்.**
1—3—33.

சிவமயம்.

நூலாசிரியர் முன்னுரை.

சிவநேயம், அன்பர்பணி, சாத்திர விசுவாச மிவைகளிற் சிறந்து விளங்கும் சிரியர்காள,—

சிலவாண்டுகட்கு முன்னம், ஜீவகாருண்ய விளக்கமெனுமொரு நூல் என்னால் வெளியிடப்பட்டுளது. அந்நூலில் எனது முன்னுரையில் ஈசுர வழிபாடெனுமொரு நூல் வெளிவருமென்று வரைந்துள்ளேன். அவ்வாறே அந்நூல் இஞ்ஞான்று வெளியிடப் பட்டுள்ளது. இதில் உடன் சேர்த்திருப்பது பிறவிப்பேறு, பஞ்சாக்கர விளக்கம், பஞ்சாக்கர மகிமை என்பனவாம். எமதாசிரியர் சித்தாந்த சரபம் அட்டாவதானம், சிவஸ்ரீ கலியாண சுந்தர யதீந்திரர் அவர்கள் நடாத்திய 'சித்தாந்த'மெனும் சிரிய மாதப்பத்திரிகையில் வெளிவந்த பஞ்சாக்கரமெனும் பொருட் பகுதியையும், பஞ்சாக்கர சம்பந்தமான பிறநூல்களையும் குறிக்கோளாகக் கொண்டு, பஞ்சாக்கர விளக்கமெனத் தலைப்பெயர் தந்து, எழுதிய இதனை சென்னை, பெருமாள் பேட்டையில் வதியும், ஈசூர் சச்சிதானந்த சுவாமிகளது சிடர் ஐயாக்கண்ணு சுவாமிகளது பாதசேகரரும், துறவுநிலை விளக்க முதலான பதினன்கு நூல்களை வெளியிட்ட பெரியாருமான

ஸ்ரீமத் ச'ர்மி, குப்புசாமியவர்களது விருப்பத்திற்கிணங்க, ஈசுர வழிபாட்டுடன் வெளியிடலாயினேன். இதிற் சொற் குற்றம், பொருட் குற்றங்களிருப்பின் நல்லொழுக்கத்திற் சிறந்த பேரறிவாளர்கள் அவைகளைக் கவனியாது பிழை பொறுக்குமாறு பன்முறை பிரார்த்திக்கும்

தங்களதன்பன்,

காவித்தண்டலம். வேதாசலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீமத். தென்பட்டினம். மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, எம். ஏ. பி. எல்., அட்வேகேட்.

சைவத் திருவாளர் காவித்தண்டலம் வேதாசல முதலியார் அவர்களைச் சைவத் தமிழுலகம் நன்றாக அறியும். சைவக் கூட்டங்களில் அடிக்கடி சொற்பொழிவு நிகழ்த்தும் பெரும்பேறு பெற்ற அப்பெரியார் **"சீவகாருண்யம்"** எனும் பொருள் பற்றித்தாம் பன்முறை எடுத்துக்கூறிய உண்மைகளைச் **"சீவகாருண்ய விளக்க வினாவிடை"** எனத் தெளிவாக விரித்து விளக்கியது போல, இதுபோது **"பிறவிப் பேறு," "ஈசுர வழிபாடு," "பஞ்சாக்கர மகிமை," "பஞ்சாக்கர விளக்கம்"** என்ற பொருள்களைப்பற்றிய சொற்பொழிவுகளின் உட்கருத்துக்களை நூல் வடிவாக வெளியிட்டிருக்கின்றார். இந்நூலை ஓதி உணரும் பேரின்பத்தைப் இப்பெரியார் எனக்கு வலிய வந்து ஊட்டியருளினர். இப்பொருள்களைப் பற்றித் தமிழ் நூல்களில் காணக்கிடக்கும் பைந்தமிழ்ப் பாடல்களும், அரும்பெரும் கருத்துக்களும் இவருடைய சொன்மாலை நடுவே பெருமணி பதக்கங்களாகப் பேரழகு பெற்றுப் பொலிவுறுகின்றன. பசுமரத்தாணிபோல அக்கருத்துகளை மனதிற் பதியவைக்கும் வரலாறுகளும் இன்சுவை தந்து எதிர்கொள்கின்றன. மறைமொழிகளின் உண்மைகளைப் பெரியார் மொழி கொண்டே விளக்கியுள்ளமை, இனி இப்பொருள்களைப் பற்றிப் பேசுவார்க்கு வழிகாட்டியாகும். இப்பெரியாரும், இப்பெரு நூலும் என்றும் வாழுமாறு இறைவன் அருள்புரிவானாக.

ம. பாலசுப்பிரமண்ணிய முதலியார், பி. ஏ., பி. எல்.,

சித்தாந்தப் பத்திரிகாசிரியர், சென்னை.

இந்நூலிலே மக்கட் பிறவியினருமை, அப்பிறவியில் இயல்பாக அமைந்துள்ள பல வகையான துக்கங்கள், அவற்றை நீக்கி உண்மையான பிறவிப்பெரும் பயனையடையும் வழி, ஈசுர வழிபாடு, கடவுளின் திருவுருவங்கள், ஆலய அமைப்பு, தரிசனவிதி, அன்பர்பணி, பஞ்சாக்கரத்தின் சிறப்பு, ஐந்தெழுத்தின் இரகசிய நுட்பங்கள் முதலிய பற்பல செம்பொருள்கள் மிகச் செம்மையாகவும், எல்லோரும் அறியக்கூடிய எளிய நடையிலும், பல சிறந்த மேற்கோள்களுடன் விளக்கப்பட்டுள்ளன. இந்நூலை யெழுதி நந்தமிழ் மக்களுக்கு உதவிய பெரியார் சைவத் திருவாளர். காவித்தண்டலம் வேதாசல முதலியார் அவர்களே. அவர்கள் நைஷ்டிக பிரமசரிய விரதம் பூண்டு, தமது ஆயுள் முழுமையையும் சிவபூசையிலும், சைவ சமயப் பிரசாரத்திலுமே செலவழித்து வரும் கிடைத்தற்கரிய தொண்டராவார்கள். அத்தகைய ஒழுக்கம், தொண்டு முதலியவற்றை ஒருவரிடத்தே ஒருங்கே காண்டல் மிக அரிது. அவர்கள் பல ஆண்டுகளாகப் பல இடங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடிய பல சபைகளில் சொற்பொழிவு செய்த அநுபவம் இந்நூலில் ஒவ்வொரு பக்கத்திலும் திகழ்கின்றது.

கற்றோரும், மற்றோரும் காமுறும் வண்ணம், இந்நூலில் அருமையும், எளிமையும் விரவியுள்ளன. சைவ நன்மக்கள் இந்நூலைப் படித்து பிறவிப்பெரும் பயனைக் கடைப்பிடித்து ஒழுகுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை வழுத்துகின்றோம்.

உ

பு. பா. இரத்தினசபாபதி நாயகர்.

ஈசுர வழிபாடு எனப் பெயர் பெறுமிந் நூல் தமிழிய லுணருந் தகைமையும் மதிநுட்பமும் வாய்ந்த அறிஞர் காவித்தண்டலம் திருவாளர் வேதாசல முதலியார் அவர்களால் எழுதப்பெற்றது எனுஞ் சொற் கேட்டபோதே தென்னாட்டவர் எவரும் இதனைக் கூசாது வாங்கி ஓதிக் கவலைப் பரவையினின்று கரையேறுவது திண்ணம். காவியச் சுவையின் முழுமையில் முழ்கி முழுகி இன்ப உருவோடெழுவதின்றியே இருக்கின்ற இலக்கிய இலக்கணங் களை உருப்போட்டுக் கற்றனர்கற்றவண்ணம் நாப்பயிற்சியாப் பேசலாம். ஆனால் இந்நூல் ஆசிரியரைப்போல் அவற்றினைச் சிந்தனையின் செறிவாக் கொண்டிருப்பவர் சிற்சிலரே. தூய் மையுற்ற உளத்தோடு இயற்கை யாராய்ச்சித் திறவுகோல் கொண்டு செலுத்தப்பெறும் முன்னேற்ற யந்திரத்தில் அறிவு அரைக்கப் பெறுவதாயின் அதனின்று வீழ்கின்ற திப்பியாம் சோம்பலைக் கரமெடுத்துக் கும்பிட்டுச் சொற்க ளும் செயலும் சிதைவுற்றுத் திரியுமிந் நாளில், 'தாம்பெற்ற பேறு பெறுகவிவ் வையகம்' எனும் ஆன்றோர் அமுதமொ ழிக் கிணங்க தாம் இயற்றும் நூற்களின் மூலம் அறவுரை கூறித் தேய்ந்த அறிவைத் தெளிவுபெறுத்தற்கே முயலும் முதலியார் அவர்களுக்குத் தமிழுலகம் இயற்றுங் கைம் மாறு யாதே!

எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினு மரிதரிதுதா னெனினும் அதனைப் பெறற்குரிய பேற்றைப் பெறுதலின்றியெக் காலத்துந் துக்கமே சூழுந் தொல்லையி ரும்பிறவி அலலலுக்கே ஆளாவதை, 'பிறவியின் அருமை' எனத் துவக்கி பிறவியாற்பொருளாற் பிறவற்றால் வருந் துக் கம் முதலியவற்றை விளக்கும் முகத்தோடு ஆசிரியர் முடித் துக் காட்டுஞ் சுவை சிந்தித்தற் குரியதே.

மிதியடிமுதல் கேசம்வரை மாறுதலடைந்த விந்நாளின் இயல்புக் கியைந்தவாறு சமயத்தில் சீர்திருத்தம் பல செய்தல் வேண்டும் என அறிஞர்களின் அறிவுக்கும் இதனுற் பெற்றபயன்தான் யாதெனக் காணுத் தம்மனுபவத்திற்கும் ஒவ்வா உரைகூறும் பாவலர் நிறைந்த இக்காலத் தமிழ்நாட்டில், பண்டைச் சிவாலய தரிசன விதியையும், அன்பர் பணிக்கு ஆவினை யுவமைகாட்டும் அமைதியும் அழகுபெறக் கொண்டுள இந்நூல் முழுதுங் காணுக் கண்களே புண்கள். இவையன்றி யுவமைப் பிறிதிலே.உலகம் முழுவதும் நம்மனுபவத்திற் காணும் வண்ணம் சுகம் விழைவது இயற்கையேயெனினும் அச்சுகமெனுஞ் சொல்லின் நடுவில் துக்கச் சூழலே தொக்கியிருப்பதை யுணர்தற்குச் சிந்தனை சிறிதே வேண்டும். உணர்ந்தபின் பிறவிப்பிணி நீக்கிப் பேராநந்த வீட்டினையளிக்கும் இறைவன் திருவருட்பேறே பெருஞ்சுகம் எனுமிதை ஓர்ந்துகோடற்கியலும். இவ்வருஞ் செய்தியை விரிவுறவோதிய நூற்களை யோதற் கியலா மக்களும் எளிதில் உணரும் வண்ணம் இந்நூல் விளங்குகின்றது. இறைவனை வழிபட முயல்குநர்க்கு அவன் திருமேனியை விளங்கக் காட்டிய பின் அவன் தன் திருமேனியில் நம்மைக் கலப்பித்தற்குரிய ஐந்தக்கர மனுவையும் அம்மனுபெற்றுத் தன் மணுளனையும் நெறிப்படுத்திய காசி மன்னன் மகளையும் நங்கண்முன் காட்டுமிப் பெருநூல் முழுமுதற்பரமன் அருளேபோல் மக்கள் மனத்தகத்தே பதிந்து எந்நாளும் மிளிர்க. அந்தண்மை வாய்ந்த அறவோராயிருந்து இத்தகைய அரும் நூற்களை யுலகிற்கு உபகரித்து மக்களைச் செம்மைசேர் நெறியில் சேர்ப்பிக்கும் திரு. முதலியார் போன்ற அறிஞர்களின் கரங்களுக்கே அடைக்கலம் !!!

சென்னை, பச்சையப்பன் கல்லூரித்தமிழ்ப் பண்டிதரும்,
தமிழ்ப் பாடங்கட்குச் சூப்பரிண்டேண்டுமான
(Member, Board of Studies of the Madras, Annamalai & Andhra Universities.)

திருவாளர் மோ. கந்தசாமி முதலியார்,
B. A., M. R. A. S.

அவர்களால் இயற்றப்பட்டன.

நாவிலே கிடந்த சொல்லின் நவில்பயன் கேட்டோர் வேட்பப்
பாவிலே கிடந்த இன்பப் பயனெலாம் விளக்க வல்லான்
பூவிலே கிடந்த மங்கை பொலிதாவித் தண்ட லப்பேர்ப்
பூவிலே கிடந்த வேதா சலமெனும் புகழ்பேர் உற்றோன் (1)

மருளுறு மாக்கள் நெஞ்சின் வன்துயர் பரிதி முன்னும்
தெருளுறு பனிநீர் ஆகத் தீயுறு பஞ்சி யாக
அருளுறு நிலையை நாடும் அடியவர்க் கின்பம் ஓங்கப்
பொருளுறு மொழியாற் பற்பல் பொலிநய நூல்கள்
யாத்தோன் (2)

பன்னரிய மேற்கோளால் பரிந்துரைத்த பிறவிப்பே
றென்னு நூலே
என்னரிய உளம்நுகலாக் கலியாண சுந்தரப்பேர் ஏய்ந்த
வள்ளல்
உன்னரிய ஐந்தெழுத்தின் உண்மையொடு உலகினர்க்கிங்
கூட்டு வானுல்
நன்னெறியால் புகழ்வேதா சலனெனும்வேள் நாம்உய்ய
வாழ்க மாதோ. (3)

சைவத் திருவாளர் சென்னை

ந. வே. அப்பாதுரை முதலியார் இயற்றியன.

தொண்டர் வாழுந் தொண்டைநன் னாட்டில்
பண்டை நாண்முதல் பல்லோர் போற்றும்
காண்டற் கினிய களத்தூர்க் கோட்டம்
பூண்டிடு புகழின் பொலிந்திடு நந்தம்
கொண்டைகட் டிகளெனப் பண்டமர் மரபின்
சந்ததி தழைக்க வந்து தோன்றிப்
பீடார் நைட்டிக பிரம சரியத்
தேடார் புகழின் எழிலொடும் விளங்கி
காவித் தண்டலக் கவினுர் தன்பதி
மேவிய புகழின் மேன்மேல் விளங்கக்
கோதில் குடிப்புகழ் குறைவுறு நிலையின்
தன்னருந் தந்தை தான்செய் திருப்பணி
தன்னது வாகும் தவமெனக் கொண்டே
இரவலர் எவர்க்கும் இன்சுவை யடிசில்
கரவா தளிக்கும் கருணையிற் சிறந்து
'சீர்பெற வேண்டின் சிவத்தொண் டினிதே
ஆருயி ருள்வரை ஆற்றுதல் கடனென'ப்
பல்லுயிர் தம்மின் அல்ல லகற்றிச்
சிவ காருண்யச் சீரிய விளக்கம்
பாவ மகலப் பரிவி னீந்தவன்
இருவினை யறுக்கும் ஒருநெறி யெவர்க்கும்
ஈதெனக் காட்டக் கோதறு நிலையில்
ஈசுர வழிபா டென்னு நூலினைத்
தேசுறு மன்பின் சிறக்க ஈந்தனன்
உத்தமச் செல்வன் பத்தியிற் சிறந்தோன்
என்னருங் குரவன் பொன்னிகர் குணத்தன்
வித்தக னாகும் வேதா சலனவன்
இத்தரை யதனில் எண்ணி லாண்டுகள்
செவ்வே னருளான் செவ்விதின் இனிதே
வாழிய மாதோ வாழிய மாதோ.

உ
வேலுமயிலுந் துணை.

சாத்துகவி.

இது,
சென்னை, "விவேகபாநு" ஆசிரியரா யிருந்தவரும்,
"எட்டிகுடி, ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தோத்திர மஞ்சரி,"
"திருப்பாதிரிப்புலியூர் ஸ்தலமான்மியம்," "மதனுகமலீலை,"
"வர்த்தகயூகம்," "ஸ்ரீ வடிவுடையம்மன் தாலாட்டு,"
முதலிய பல நூல்களி னாசிரியருமான,
தமிழ் நாவலர்,

சு. கு. கோவிந்தசுவாமிப் பிள்ளை

அவர்களியற்றியன.

அறுசீர் விருத்தம்.

உலகமுயப் புகழ்காவித் தண்டலைநற் பதிதனிலே
யுதித்து மேன்மை
யிலகுதமிழ்க் கலைக்கடலைப் பருகிநிறை யொலியெழுப்பி
இணையிற் சீர்த்தி
யலகுபுக ழத்தனையு மடைந்துயிரி னிரக்கநெறி
யன்பா யேற்றுத்
திலகமெனப் புலவரவைத் திகழ்ந்துநனி யமுதவுரை
தெரிக்கு மேகம் (1)

பந்தமெனு மனைவாழ்க்கை யகற்றியனைட் டிகமாணிப்
பதவி மேலோ
னந்தமிலா வரும்பொருளன் படக்கருண மொழுக்கமெலா
மடைந்தா ராழி
யெந்தைசிவ சண்முகனை இறையைமலை யணங்கையுளம்
இகவா தேத்துஞ்
சிந்தையறி வானந்த நிலையுறைவே தாசலனுஞ்
சீர்மை யாளன் (2)

புத்தமுத மெனுமீசு ரன்வழிபா டெனுமினிய
புனித நூலே
யுத்தியொடும் பன்னூலின் கருத்துநல மொருங்கமைய
உண்மைத் தாகு
மெத்திறத்துப் புலவர்களு முவந்துச்சி கொளுமாறு
யேரி னீந்துப்
பத்திநிறைப் பணிபூண்டான் பாருள்ளார் பரசாழிப்
பதிந்திட் டானல். (3)

உ
சிவமயம்

ஸ்ரீமான் உக்கல்

ஆறுமுக முதலியார்வர்கள் இயற்றியன.

வெண்பா.

கற்றற் கரிய கருணேவளர் நன்னூலே
முற்ற உரைத்தீர் முதுமொழியால்—பற்றின்
அகப்படா ஈசன் வழிபாடும் அறைந்திட்டீர்
குகநேசன் நல்லருளேக் கொண்டு.

வேறு.

மதிசூடும் பெருமானுர் மகிழடியின் பத்திமிகு மகிபனுன
துதிசூழு மொருவேதா சலனென்னும் தூய்மைமிகு
[தொண்டின்மிக்கான்
விதிசூழும்பன்னூலின் பயனுணர்ந்து நலம்பெறவே விளக்கி
[யீந்தான்
மதிசூழும் ஈசுர வழிபாடா மொருநூலே மகிழ்வின்
[மாதோ.

சிவமயம

கணபதி துணை.

பிறவிப்பேறு.

பிறவியினருமை.

இவ்வுலகத்திலளவிடற்கரிய பலபிறவிகளுள்ளும் இம் மனிதப் பிறவியே நாம் முற்பிறவிகளில் செய்த வருந்தப் பேற்றால் நமக்குக் கிடைத்துளது. இச்சரீரம் போனால் மீண்டுமிம் மனித சரீரமே வருமென்கிற நிச்சயமில்லை. இ - உ ம்.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவி
 தானியாதினும் மரிதரிதுகா
ணிப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
 யாதுவருமோ வறிகிலேன்." —**தாயுமானவர்**

பிறவியின் அநித்தியம்.

இப்படி அருமையான சரீரமாயினும் இக்கணமிருந்தது இனி வருங்கணத்து இருக்குமென்கிற நிச்சயமில்லை. உலகத்தில் சொல்லும்படியான எத்தொழிலில் வல்லவரும் ஆயுள் பிரமாணத்தை இவ்வளவென்று நிச்சயப்படுத்தி வைத்தவரைக் காணோம். ஆனால் சாதாரணமான உலகப் பழமொழி ("மலரோன் மண்டையிலெழுதி மயிரால் மறைத்து வைத்தான்") என்று மாதர்களுஞ் சொல்லக் கேட்

கிறேம். இதனல் மெய்ஞ்ஞானிகள் தவிர எனையோரா லாயுட் பிரமாண வளவை யறிந்து கொள்ளவேலாதென்று நன்கு விளங்குகின்றது. "இக்கணமிருந்த தினிவருங்கணத் தூடிருக்குமோ விறக்குமோ" என்ருர் சாந்தலிங்க சுவாமி களும். அன்றியும் இச்சரீரம் மாதாவின் கர்ப்பத்தில் இடை நடுவே அழிந்து போவதுமுண்டு. பிறந்தவுடனே யிறப் பதுமுண்டு. ஆறு ஏழு தினங்களிலும் மரணமடையும். குமாரப் பருவத்தும் தருணப் பருவத்தும் இறக்கும். வயோ திக திசை வந்து மிறப்பதுண்டு. ஆனதாலிச் சரீரமுள்ள போதே யீசுரனை வழிபட்டு பிறவியை யொழித்து பேரின்ப வீடடைவதற்கு முயலவேண்டும்.

இ - உ - ம்.

"கருவினுளழிவதாயுங் கழிந்திடாதழிவதாயும்
பரிணமித்தழிவதாயும் பாலனுயழிவதாயும்
தருணனுயழிவதாயும் தானரைத்தழிவதாயும்
உருவமேயழிவேயானு லுள்ளபோதே பாருய்ய."

—சிவஞான சித்தியார்.

"மின்போலழியும் வயிற்றுமை
வடிவாயழியும் மெய்யுருவாய்
முன்போயழியும் பிறந்தழியும்
மடவாருடனே முயங்கியதன்
பின்போயழியும் நரைத்தழியும்
பேய்போற்றிரிந்து பெயர்ந்தழியும்
பொன்போல் வளர்த்து மிவ்வுடலம்
நிலேபாதழிந்து போய்விடுமே."

—பேரூர்ப் புராணம்.

பிறவியின் துக்கம்.

சீவன் பிதாவின் கர்ப்பத்தி லிருமதியந் தங்கி பிறகு அவனிந்திரிய மூலமாக மாதாவினது கருப்பையில் வந்தடைகிறான். அப்படியடைந்த முதல்நாள் தெளிவிலா சோணித சுக்கிலங்கள் திரண்ட அவஸ்தையை யடையும். ஏழுதினத்திற் புற்பதமாகும். அரை மாதத்தில் பிண்டமாகும். ஒரு மாதத்தில் கடின தன்மையடையும். இரண்டாவது மதியத்தில் சிரமுண்டாம். மூன்றுமதியம் பாதமாம். நான்காம்தியம் விரல், வயிறு, இடைப்பிரதேசமுண்டாம். ஐந்தாம் மாதம் பின்னிடமுண்டாம். ஆறுவது மாதத்தில் வாய், மூக்கு, செவி, கண் உண்டாம். ஏழாவது மாதம் சிவசம்பந்தமுண்டாம். எட்டாவது மாதத்தில் சர்வ அங்கங்களும் பூரணமாம். ஒன்பதாவது மாதத்தில் ஞானம் நிறைதலின் முன் பிறப்புகளின் ஸ்மிருதி யுண்டாம். அக் கர்ப்பத்தின் கண்ணே எட்டுமாத பரியந்தம் சீவனுக்கு மூர்ச்சை வடிவ அஞ்ஞானமிருக்கும். அவ்வஞ்ஞானம் சகல துக்கத்துக்கும் காரணமாகும். கர்ப்பத்தின் கண்ணே சீவனுக்கு தன்னுடைய பசிதாகங்களாலும் மாதாவினுடைய பசிதாகங்களாலும் மிகவுந் துக்கமுண்டாம். சரீரத்தின் கண்ணே அசமாத்தமுண்டாம். ஒன்பதாவது மாதத்தில் சீவனுக்கு அனந்த ஜன்மதுக்கங்களின் ஞாபக முண்டாவதால் யீசுர தியானத்தோடு இவ்வண்ணங் கூறும்.

இ - உ - ம்.

"உணவு பலவகை யுண்டனம் பலமுலை குடித்தே
மண்ணி செயன்னையர் தந்தையரரிய மாநேய

மெண்விறந்தன் கண்டனமினிப் பிறந்திடினே
துணி மகேச்சுரன் பதத்தினைத் தவத்தினுற்
றொடர்வேம்."

—என்றுர் பேரியார்.

இச் சிவனுனது மாதாவினது கர்ப்பத்தின் கண் தங்கிய நாள் முதல் படுந்துயர் அளவேயின்று. இப்படி சொல்லப்பட்ட பலவகைத் துன்பத்துள்ளும் உற்பவ காலத்து ஐந்து பெருந்துயருள. அவை கருப்பாசயப்பை யுறுத்தல், அதிற் சலம் பூரித்தல், உதராக்கினியிற் சுடுதல், பிரசூத வாயு முறித்துத் தள்ளல், யோனித் துவாரத்தில் நெருக்குண்டல், மலையிலிருத்திக் தொண்டது போலவும், கடலின் கண் வீழ்த்தி மிதித்தல் போலவும், இருப்புக் கடத்திலடைத்து நெருப்பாற் கொளுத்தல் போலவும், மலைமேல் நின்றுனைத் தலை கீழாகத் தள்ளுதல் போலவும், ஆலையிட்ட கரும்பு நெருக்குண்டல் போலவும் வருந் துன்பங்களாகும்.

இ - உ - ம்.

"தாயுதரக் கருப்பை மெய்யுறுத்தலொன்று
தண்ணுதக முண்ணிறைவ தொன்று வெய்ய
தீயினிடை வெப்பமொடு வேதலொன்று
திகழ் சூதவாயுவினிற் றள்ளலொன்று
மாயமிகு யோனிவழி நெருங்கப்பட்டு
மண்ணின் மிசை மெய்வருந்தி விழுவதொன்று
ஆயமிகு வருத்தமொடு ஜனிப்பதுள்ளிவ்
வைந்து கொடுந்துன்பம் வந்தடையுமைந்தா."

—இகபோகசாரம்.

இவ்வண்ணம் மேற்சொன்ன பிரசவகாலத்துண்டாகிய ஐம்பெருந்துயரால் பிறந்ததும் சர்வ பந்தத்தையுமொழித்து சிவபிரான் திருவடியை யடைய வேண்டுமென்று எண்ணியிருந்த எண்ணம் மாறி உலக சம்பந்தமான மாயை வசப்படுகிறான். இப்படி உலகத்தில் பிறந்த காலத்தும் குழந்தைப் பருவத்தில் அறிவறியாமையினால் பலவகை துன்பத்தையடைகிறான். கௌமாரப் பருவத்தின் கண் மாதா, பிதா, ஆசிரியர் முதலானவர்களால் துக்கத்தை யடைகிறான். அறிவு உதயமாகிய தருணப் பருவத்தில் வாத பித்த சிலேத்துமங்களால் உண்டாகும் நானா வியாதிகளால் துன்பமடைகிறான். அவ்வியாதி இல்லாத விடத்து இன்பமில்லைபோவெனில், விட்டு நீங்காது மாறி மாறி வருகின்ற பசி வியாதி காம வியாதிகளினால் துன்பமுறுகிறான். ஆனால் அவ்வியாதிகள் வருந்தோறும் அருந்தல், பொருந்தல் ஆகிய மருந்தினை புசித்துத் தணித்துக் கொண்டால் இன்பமில்லையோ வெனில் அவ்வியாதியைத் தணித்தற் பொருட்டு அதற்கு ஏதுவாகிய மிகுந்த திரவியம் தேடுதலினால் துன்பம். திரவியம் வந்து பொருந்திய காலத்து இன்பமில்லையோ வெனில் அதனை இராஜ சோராக்கினியினால் சேதம் வாராதபடி பாதுகாத்தலினால் துன்பம்; இதோடு மனைவி புத்திரர் முதவானவர்களுக்கு வரும் துன்பத்தைக் கண்டு தானும் பலவகை துன்பமுறுகிறான். மேல் வயது முதிர்ந்த காலத்து பலங்குறைந்து சரீரம் திரைந்து நடுக்கமடைந்து புலன்களழிந்து குழந்தைப் பருவம்போல புத்திமாறி நிற்கும். வயோதிகப் பருவமோ பெருந் துக்கம். இதற்கப்பால் கடைசியாக வடையும் மரண துக்கமோ ஒருவராலுஞ் சொல்லவே முடியாது.

இ - உ - ம்.

"காமாதியாலுங் கடுவெம் பசியாலுஞ்
சாமாறுந் துன்பமதைச் சாற்றுகிலேன்-கோமானே
யெண்சாணுடம்பதனுல் பட்டதுயரென்சொல்கேன்
புண்பரிவின் வேனுழைந்தாற்போல்."

—சிவஞான வள்ளல்

இ - உ - ம்.

"மரண வாதனையாவரா லறியலாம் மயங்கியைம் புலனந்தக்
கரணம் யாவையும் கலங்கிட வருந்துயர் கடவுளே யறிகிற்
[பான்."

—குறுந்திறட்டு.

இ - உ - ம்.

"பலமது குறைதலாகம் பழுத்திடல் நடுக்கமைந்து
புலன்களு மகிமைபற்றுப் போவதுமல்லாற் பெற்ற
நிலைமையினிற்றல் மூன்றும்நீள் பதந்தன்னைக் கொள்ளல்
இலகுறும்புந்தி மாழ்கலாகவேமுடையர் மூப்போர்."

—அனுபவசாரம்.

பொருளால் வருந்துக்கம்.

உலகத்தில் பொருளால் வருந்துக்கம் பல. பொருள் சம்பாதித்தல் காரணமாக ஒருவருக்கொருவர் பூலவகையான குரோதமுறுகின்றனர். இதுவல்லாமலும் பிராண ஆனி முதலானதும் அடைகின்றனர். பொருளைத் தேடுவதிலும் அதைக் காப்பதிலும் துக்கம். அதைச் செலவிடுங் காலத்து குறைந்து விடுகின்றதென்ற துக்கம். பெரிய பாகிங் முதலானவைகளில் வைத்து முழுது மிழந்து விட்டால்

அவர் படுந்துன்பத்துக் களவேயில்லை. இதனால் உலகத்தா ரால் இதற்கு துக்க ஆணியென்று ஒருபெயர் வழங்குகிறது.

இவ்வழியுந் தன்மையுள்ள பொருளால் பல வகை துக்க மிருப்பதைக்கண்டு சிவபெருமான் திருவடிப்பேருகிய வருட் செல்வத்தை விரும்பிய அவனடியார்கள் வாந்தி செய்த அன்னம் மல மூத்திராதிகளைப் போல இதை அரு வருத்துத் தள்ளி யுள்ளார்கள்.

இ - உ - ம்.

"புள்ளிய தோலாடை புனைந்தரவப் பூணணிந்து
வெள்ளிய செங்கண் விடையானடிக்கமல
முள்ளிய மெய்யன்புடையா ரறுவறுத்துத்
தள்ளிய செல்வத்தருக்கினுய் யென்செய்தாய்."

—திருவிளையாடல்.

என்னும் ஆன்றோர் வாக்குப்படி அனித்தியமாகிய செல்வத்தை வெறுத்து பொன்னம்பலத்தின் கண் ஆனந் தத் தாண்டவஞ் செய்தருளும் நடராஜப் பெருமான் திரு வடித் தாமரைகளை திரிகரணங்களாலும் நீங்காது வழிபடும் திருவருட் செல்வமே மேலானதாகும்.

இ - உ - ம்.

"செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வமுயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே"

—திருக்கடைக்காப்பு.

ஆனல் பொருட்செல்வந் துக்கந் தருவதானலும் பிறருக்கு இம்சையின்றி பொருளைத் தேடி பேரறிவாளர்கள், குரு, லிங்க, சங்கமமாகிய சற்பாத்திரத்தில் செலவிட்டு அருட்செல்வத்தை யடையலாம்.

இ - உ - ம்.

"அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு" —திருக்குறள்.

மாதரால் வருந்துக்கம்.

உலகத்தில் மன்மதனென்கிற கிராதன் புருடர்களென்கின்ற பட்சிகளை பெண்களென்கின்ற வலைகளைப் போட்டுப் பிடித்து பாதிக்கின்றனன். அன்றியும் ஜென்மமென்னுங் குளத்தில் தீமனமென்னுஞ் சேற்றில் சஞ்சரிக்கும் புருடரென்னு மீன்களைத் துர்வாசனை யென்னும் கயிற்றில் ஸ்ரீகளென்னும் தூண்டு முள்ளைப் போட்டு மன்மத வலைஞன் பிடித்து மோகாக்கினியில் சமைக்கிருன். என்ருல் உலகத்தில் ஸ்ரீகளால் புருடர்களடையும் துக்க மெவ்வகையென்று பாருங்கள்.

இ - உ - ம்.

"மாமடஞ் செறிந்த நெஞ்சின் மனிதராம் புட்பிடிக்கக்
காமனும் வேடன் வீசும் வலையொப்பார் கருங்கண் மாதர்
தீமனச் சேருர் சென்மச் சிறுகுழி மீனுமாந்தர்க்
கெமவாதனைக் கயிற்றுத் தூண்டிடிலுக் கிரையுமொப்பார்."
—ஞானவாசிட்டம்.

அன்றியும் உலகத்தில் அழகுவாய்ந்த பெண்களை விவா

கஞ் செய்தால் இல்லத்திலவர்களுக்கு வேண்டிய காரியஞ் செய்தல், அவர்கள் பிணக்கைத் தவிர்த்தல், நல்லாடை ஆபரணம் புட்பம் முதலானவை அவர்க்கு வாங்கிக் கொடுத்தல், இரவும் பகலு மிடைவிடாது பாதுகாத்தல் முதலானவைகளால் புருடர்கள் உலகத்தில் பலவகைத் துன்பத்தையடைகின்றார்கள்.

இ - உ - ம்.

"யௌவன பருவத்தழகு வாயந் தண்ணுந்
தடிபரந் தெழுமுலையாரைச்
செவ்விதினுப்தல் கடிமணம் புணர்தல்
சிறப்பு நாடொறு மவர்க் கியற்றல்
வெவ்விய வூடலொழித்த
னல்லாடை விளங்கிழை யாதிகணேட
லொவ்வுற வவற்றைப் பாதுகாத்திடுத
லாதியினுறும் பல துன்பம்." —**சூதசங்கிதை.**

உலகத்தில் பால்யப் பருவத்தில் காமாந்த காரமென்னுங் கடலிலாழ்ந்து மனைவி யென்னும் விலங்கிற்பட்டு புத்திரனென்னுஞ் சாவியினலவ்விலங்கு பூட்டப்பட்டு உயிராகிய புருடன் ஆசையாகிய படுகுழியிலழுந்தி வருந்துகிறான். இது சிவர்கள் காமத்துக் கேற்ப ஈசுரனுலமைக்கப்பட்டது போலும்.

இ - உ - ம்.

"கள்ளிக்கு மாலாக்கி காற்கு விலங்காக்கிப்
பிள்ளைக் கடையாணிப் பின்னிறுந்தி—பொல்லாக்
கடுமிடற்றன் சோணேசன் கற்பித் துயிரைப்
படுகுழியிற் பாச்சுவதைப் பார்."—**சிவஞானவள்ளல்.**

உலகத்தில் விவாகமில்லாதிருப்பது உத்தமம். விவாகஞ் செய்து பத்தினி யோடிருப்பது மத்திமம். அம்மனைவிக்கு ஆண்சந்ததி ஒன்று, பெண்சந்ததி ஒன்றோடிருப்பது அதமம். இவ்வகையன்றி ஆண்பாலர் பலர், பெண்பாலர் பலராயிருத்தல் அதமாதமம். அன்பர்கள் புத்திரனுக்கு வயது வந்ததும் குடும்ப பாரத்தை அவன் பால்விட்டு ஓர் யோசனைக்கப்பால் போய் குரு, லிங்க, சங்கம வழிபாடு செயின் பிறவா நெறி யடைவர்.

இ - உ - ம்.

"வரிக்கயலனைய கண்ணார் மாநலந் துய்த்த பின்னர்
விருத்தனுங் காலமேனும் விரத்தனு யாவு நீத்து
இருக்கு மந்நிலமகன்றோர் யோசனை யெய்தப் பெற்றால்
திருக்கண்மூன்றுடைய பெம்மான்சேவடி சேர்தறிண்ணம்."

—சிவஞானவள்ளல்.

புத்திரரால் வருந்துக்கம்.

உலகத்தில் ஒவ்வொருவரும் புத்திரராலடைவது சுகமா, துக்கமா, வென்றாராயுமிடத்து பெருந் துக்கமேயாகும். புத்திரனில்லாதவர்களுக்கு இல்லையென்கிற ஒரே துக்கம். புத்திரனுள்ளவர்களுக்கு மாதாவின் கர்ப்பத்தில் உற்பவித்த நாள் முதல் மரண பரியந்தம் துக்கம் எப்படியெனில் புத்திரனில்லையென்று கண்ட கண்ட கோவில்களுக்குப் பிரார்த்தனை, உப்பில்லாத வன்னமுண்ணல் முதலான விரதங்களிருத்தல், பிறகு மனைவி கர்ப்பமுற்றால் இடைநடுவேபோய் விடுமென்கிற துக்கம், ஒன்பது பத்தாவது மாதத்தில் வெகு நாள் புத்திரோற்பத்தியின்றி யிப்

போதுண்டானதால் பிரசவகாலத்து தாய்க்கு மரணம் விளைவிக்குமென்கிற துக்கம், அப்படியன்றி சுகமாகப்பிறந்த விடத்தும் குழந்தை ஸ்தனபானம் செய்யவில்லை அழ வில்லை யென்கிற துக்கம், பால் முதலான துண்டு சுகமா யிருந்த போதிலும், சோதிடர் குழந்தைக்கு சாதகங் கணித்து இப்போது புத திசை சனிபுத்தி ஆறுமாத மிருப்பது இதில் தாயார் மரணமடைவாள், அடுத்த கேது திசையில் சுயபுத்தியிலேயே பிதா மரணமடைவனென்று சொன்னால், இப்பிள்ளை எங்களுக்கு எமனாக வந்ததே யென்று அவர் படுந் துக்கத்துக் களவேயில்லை. அப்படி யன்றி ஓராண்டில் இக்குழந்தை மரணமடையுமென்று சொன்னால் அதினாலுந் துக்கம். அன்றியும் பல் முளைக்கும் போது பேதி கண்டு மரணமடையும் பல குழந்தைகளைக் கண்டு இவ்வண்ணம் நமது குழந்தையும் இறந்துவிடுமோ வென்கிற துக்கம். குழந்தை யிளைத்துப் போனால் குணத் தாலும் செயலாலு மீனமுடைய வயித்தியர்களைத் தேடு கிறார்கள். ஒரு பொருளாக மதிக்கத் தகாதவர்களை யும் மதித்து சிநேகிக்கிறார்கள். இருசி, காட்டேரி, மாரி முதலான தேவதைகளைப் பிரார்த்தித்துக் கொள்வதுடன் அவைகளுக்குப் பூசைபோட்டு ஆடு, கோழி, ஒன்றன் முத லானவைகளையும் பலியிடுகின்றனர். வைசூரி, வாந்திபேதி முதலான கொள்ளைநோய் வந்தால் நம் குழந்தைக்கும் அது வந்து யிறந்து விட்டாலென் செய்வதென்றேங்கி வருந்து கின்றனர். இதுபற்றி யாராவது கழுதை யுண்ணக் கடலை கொடுத்து அதை மும்முறை வலம் வந்து நமஸ்கரித்தால் உங்கள் குழந்தைக்கு அந்நோய் வராதென்று சொன்னால்

அப்படியே செய்கிறார்கள். பிள்ளைக்கு வயது வந்து நன்ருகப் படியாவிட்டால் அதினாலுந் துன்புறுகின்றனர். நன்ருக வாசித்தாலும் வயது வந்த பிறகு பிள்ளைக்குத் தகுதியான பெண்ணைப் பார்த்து விவாகஞ்செய்ய வேண்டுமென்று கவலை யுறுகின்றனர். அப்படி விவாகஞ் செய்த பிறகு தாம் சம்பாதித்த பொருளை வீண் செலவிடுகின்றனனென்று துக்கமுறுகின்றனர்.

அப்படியன்றி அத்தருணப் பருவத்தில் ஆயுட் குறையா லப்பிள்ளை யிறந்துபோனால், தாய்தந்தையர்கள் தலையிலடித்துக்கொண்டு தங்களை நிராதரவாய் விட்டுப் போனனென்று இரவும் பகலும் ஓயாமலழுது வருந்துகிறார்கள். அப்படி யிறவாமல் பிள்ளை ஆயுளோடிருந்தாலும் மனைவியின் வார்த்தையைக் கேட்டு மாதாபிதாக்களை எப்போதும் தூஷிப்பதும் அடிப்பதுமாயிருக்கிறான். வயோதிக திசையில் இவனால் இவர் படுந்துக்கம் அளவன்று. ஆனதால் மாதாவின் கர்ப்பத்தில் உற்பவித்த நாள் முதல் அந்தியம் வரையில் புத்திரனால் துக்கமே யொழிய சுகமென்பதணுவளவுமில்லை.

இ - உ - ம்.

"மதலையைப் பெறுநாள் துன்பம்
வளர்த்திடு நாளுந் துன்பம்
விதலைநோ யடையிற் றுன்பம்
வியன் பருவத்தும் துன்பம்
கதமுறு காலத்தூதர் கைப்பற்றில்
கணக்கில் துன்பம்

இதமுற லெந்நாள் சேயா
லெற்றைக்குந் துன்ப மானல்."

—குசேலோ பாக்கியானம்.

புத்திரனைப் பற்றி சிலவே ஆராய்ச்சி செய்வோம். மனைவி வயிற்றில் பத்துமாதந்தங்கி பிறந்ததனல் தன் புத்திரனென் றபிமானிக்கிருர்கள். ஆனல் அப்படி வயிற்றிலிருந்து வந்ததை யெல்லாம் அவ்வண்ணம் பாவித்து அன்பு பாராட்டுகிருர்களா ? காணேம் ! எப்படியெனில் வயிற்றிலேயே உற்பத்தியாகி நெடுநாளிருந்து வயிற்றுவலி வர அந்நோயைப் போக்க பிரவிர்த்தி சாப்பிட அப்போது வயிற்றிலிருந்து ஒரு சாணளவுக்கு மேல் நீண்ட நாக்குப் பூச்சிகள் வெளிவருகின்றன. இதனிடத்து யாராவது அன்பு பாராட்டி வளர்க்கிருர்களா? ஒருவருமில்லை. அதுபோல கண் காது மூக்கு கை கால் முதலிய அவயவங்களோடு ஒரு பூச்சி வெளிவந்தது. இதை மாத்திரம் புத்திரனென்று அன்பு பாராட்டி அதற்கு நோய், மரணம் முதலானது வந்தால் பெருந்துக்கத்தை யடைகின்றனர். அந்தோ யீதென்ன வறியாமை !

இ - உ - ம்.

"சால வுதிக்கும் புழுவுட றன்னிற்—றக
வின் மலத்தோ டொழுகு முடம்பே—போல
வுதிக்கும் புழுவினை யென்னே—புத்திர
னென்றே புந்தி செய்தாரே."

—அஞ்ஞவதைப் பரணி.

ஆனல் உலகத்தில் புத்திரராகப் பிறப்பது முன் சென்

மத்தில் நம்மிடம் கொடுத்த கடனை வாங்கிக்கொண்டு போக வந்த கடன்காரரேயாகும். இதற்குத் திருஷ்டாந்தம்.

அரதத்தர் சரித்திரம்.

கஞ்சனூரிலே சிவப்பிரியர் என்னும் அந்தணரொருவருக்கு சுமதி, தருமபாலன் என சகல சற்குணங்களுமமைந்த இரண்டு புதல்வர்களிருந்தனர். அவ்விருவரும் தகுந்த பருவம் வந்த காலத்தில் ஒரு தினம் பேதியாலும், அரவு தீண்டுதலாலும் இருவரும் ஒருங்கே உயிர் துரந்தனர். இத்துன்பம் பொறுக்கலாற்றாத் தந்தை அப்புதல்வர்களை கட்டித்தழுவி அழுதுக் கொண்டிருந்தனர். எவ்வளவு பேர் சமாதானம் சொல்லியும் அவர் துக்கம் மாறவில்லை. அதுகேட்ட அரதத்தாசாரியர் அங்குவந்து சிவப்பிரியரது துக்கம் அப்புதல்வர்கள் உயிர் பெற்றெழுந்தாலல்லது நீங்காமை கண்டு நீற்றை மந்திரித்து அப்புதல்வர்கள் உடம்பிலிட்டருளினர். உடனே அவ்விருவரும் உயிர் பெற்றெழுந்து வணங்கி தூரத்தில் நின்று ஆசாரியரை நோக்கி, சுவாமி! நாங்கள் பஞ்சமர். முற்பிறப்பில் நந்தன், வீரன் என்னும் பெயருடையோம். சிவப்பிரியரது அடிமைகளாய் நாங்கள் தொழில் செய்து வந்தோம். அவர் எங்களுக்கு பல்லாண்டுகளாய் தக்க கூலி கொடுத்திலர். அதினால் நாங்கள் அவர் புதல்வராகப் பிறந்தோம். இன்றோடு எங்கள் கடன் முற்றும் கைவரப்பெற்றமையால் இறந்தொழிந்தோம். ஆனதால் இவர் எங்களுக்குப் பிதாவுமல்ல, யாம் அவருக்குப் புத்திருமல்ல, கடனை வாங்கிக் கொண்டு போகவந்த கடன்காரர்களென்று சொன்னார்கள்.

உடனே சிவகணங்கள் விமானமொன்று கொண்டு வந்து அரதத்தரது மந்திர விபூதி உங்கள்மீது பட்டமையால் உங்களுக்குச் சிவலோகங் கிட்டிற்று. இதில் ஏறுங்களென்று கூறினார்கள். உடனே அவ்விருவரும் பூதவுடம்பு நீத்து தெய்வவுடம்பு பெற்று சிவலோக மெய்தினர். இச்சரிதத்தால் புத்திரர்களாகப் பிறப்பது கடன்காரர்களென்று நன்கு விளங்குகின்றது.

உலகத்தில் புத்திரரால் மாதா பிதாக்கள் சுகத்தையடைகின்றனரென்றால், ஸ்ரீராமனைப் புத்திரனாகப் பெற்ற தசரதரும், அவர் பத்தினியும், புத்திரனாலடைந்த சுகமென்ன? ஆகையால் மனைவி, புத்திரர் இடையிலே வந்த பந்தம் தானே. ஒருவருக்கு விவாகமில்லாத வரையில் மனைவியின் பந்தம் காணோம். மனைவி யிருந்தும் நெடுநாள் புத்திரனில்லாதிருந்தால் அதுவரையில் புத்திர பந்தங் காணோம். நாம் ஜனித்த காலத்து இவரெல்லாம் உடன் வந்தவரல்லர். இறக்கும் போதாவது உடன் வருவரோ, அதுவுமில்லை. ஆனதால் இவர்களை உறவினராகக் கொள்ளாது நாம் போகும் வழியில் வந்துகூடிப் பிரிந்தவராகக் கொள்ளல்வேண்டும்.

அன்றியும் மனைவி, புத்திரர் முதலானவர்களுக்கு நம்மையன்றி வேறு துணை யில்லையென்று கவலையுறுகின்றனர். இவரிருக்குங் காலத்து எமன் வந்து அவர்களைக்கொண்டு போனாலிவர் துணை யெங்கே? அன்றி அவரிருக்கும்போது இவரை எமன்கொண்டு போனால் இவர் அவர்களைக் காப்பாற்றுவதெங்கே? எமனுலகத்திலிருந்து ஒரு தினமாவது வந்து இவரை நன்றாயிருக்கிறீரோ வென்று விசாரித்துப்

போகத்தான் முடியுமோ? அப்படியன்றி அவரை நாமிருக்கிறவரையில் கெடுதிவராமல் காப்பாற்றுவோமென்று நினைத்தால், அவர்களுக்குப் பிரபலமான வியாதி முதலானது வந்தால் அருகிலிருந்து துக்கப்படுவரே யொழிய அவர் வியாதியை இவர் வாங்கிக் கொள்வரோ? இல்லை. சாதாரணமாக உலகத்தில் வியாதியாளரைப் பார்த்து பக்கத்திலிருப்போர் அப்பா, அது தலை சுமையா நாங்கள் வாங்கிக் கொள்வதற்கு, நீ அனுபவிக்க வேண்டிய கர்மம் அனுபவித்துத் தானே தீரவேண்டுமென்று சொல்லும் வார்த்தையைப் பல விடங்களிலும் கேட்டிருக்கிறோம். ஆனதால் உலகத்திலிருக்கும்பொழுதாவது ஒருவருக்கொருவர் துணையாவதைக் காணோம். ஆனதால் நமக்கெல்லாமுற்ற துணை ஈசுரனே யாகும்.

மனைவி, புத்திரர் முதலானவர்களை வியாதி முதலானது இல்லாதபோது காப்பாற்றுவ னென்னில் நித்திரை காலமாகிய சுழுத்தியவஸ்தையில் மனைவி புத்திரர் பொருள் முதலானவைகளை காக்கப்பட்டவர் யார்? தன்னைப் பகைவன் கொல்ல வருதலும், தன்மீதரவேறி வருதலும் தானறியவில்லை. தன் சரீர நிலைமையே தெரியாதபோது தானவர்களைக் காப்பாற்றுவதெங்கே? சுழுத்தியவஸ்தையில் நம் சரீரத்தையும் மனைவி புத்திரர் முதலானவர்களையுங் காப்பாற்றினவர் ஈஸ்வரன்றனே. அதுபோல் சாக்கிரத்தில் நம்மையெல்லாங் காப்பதவர் கடமையன்றோ? இதன்றி சாக்கிரத்தில் மனைவி புத்திரர் முதலானவர்கள் மீது நினைப்பு வந்த விடத்துத் தானே பந்தமும் காப்பும். வேறு விவ

காரங்களில் மனஞ் சென்றபோது இவர்கள் பந்தமெங்கே? யோசிக்குமிடத்து உலகபந்தம் நினைப்பளவிலிருக்கிறது.

ஆகாராதிகளில் விருப்புறுமை.

உலகத்தில் புருடர்கள் விரும்பும் சுகம் பலவற்றுள்ளும் முக்கியமானது மூன்றாகும். அதில் முன்சொன்ன ஸ்திரீ ஒன்று, அடுத்தபடி ஆகாரம், நித்திரை என்பதாம். சரீரப் பிணியைப் போக்குவதற்கு நாம் மருந்து உண்பது போல பசிப்பிணியை நீக்குதற்கு அவ்வப்போது கிடைத்த ஆகாரத்தை உட்கொள்ளல் வேண்டும். அப்படியன்றி ஷட்ருசியான பதார்த்த வகையோடும், பற்பல சிற்றுண்டிகளோடும், உண்ணுதல் வேண்டுமென்று அதற்காக முயற்சித்து வீண் காலங்கழிப்பது நன்றன்று. பசி வந்த காலத்து கூழ் முதலானதை யுண்டாலும் பசிநோயடங்கிவிடும். மேற்சொன்ன பலகார, பதார்த்த வகைகளோடுண்டாலும் இதிற் கண்ட சுகம் கண்டம் மட்டில் தானே. அவை உட்சென்று வெளிவருபோதும் துர்க்கந்தமான மலமாகத்தானே வெளி வருகிறது. ஆனதால் தினப்படி யோகி ஒருவேளை அன்னமும், குடும்பி இருவேளையும் உண்ணல் வேண்டும். அப்படியன்றி மூன்று வேளையுண்பவன் பெரும் வியாதியையடைவன். நான்கு வேளையுண்பவன் இறந்தவனுக்குச் சமானமேயாவன்.

இ - உ - ம்.

"ஒருபொழுது யோகியே யொண்டொடிக்கைமாதே
இருபொழுது போகியே யென்ப—திரிபோது
ரோகியே நான்குபோதுண்பானுடல் விட்டுப்
போகியே யென்று புகல்." —நீதி வெண்பா.

அன்றியும் நித்திரையில் வீண்காலங் கழிக்கப்படாது. பகல் நித்திரை யுதவாது. இரவிலும் ஒரு சாமத்துக்கு மேல் படுத்து சூரியோதயமாக ஐந்து நாழிகைக்கு முன் எழுந்திருக்கவேண்டும். அன்றியும் நித்திரை செய்தற்கு உன்னதமான பஞ்சணையில் காம்பரிந்த மல்லிகை மலர்களைப் பரப்பி அதன்மீது தான் நித்திரை செய்யவேண்டும் என்னும் பிரியத்தோடு அதற்கு முயற்சி யெடுத்து சிரமப்படவேண்டாம். கிடைத்த படுக்கையில் நித்திரைசெய்யலாம். மாதர் போகம், ஆகாரம், நித்திரை இம்மூன்றும் அறியாமையினால் நமக்கு சுகம்போல் தோற்றுகிறது. இம்மூன்றையும் ஆன்றோர்கள் நமக்கு இன்னல் செய்யவிருக்கும் ஏமதூதரும், எமனுமாகக் கூறியுள்ளார்.

இ - உ - ம்

"ஊணுமுறையும் நமன்றாதுவர் காணுள்ளமே
வாணுதலார் நேரேமறலிகாண்—பேணியிவ
ருற்றார்போல் வந்திடுவர் வந்தாலு மோட்டியர
னற்றாமரைப் பதமே நாடு" —சிவானந்தமாலை.

ஆனதால் இவ்வுலகத்தில் சிருட்டி தொடக்கி நாம் எடுத்த பிறவியை யளவிட முடியாது. ஆனால் சமுத்திரக் கரையிலுள்ள நுண்மணலையும், வானிலுள்ள தாரகைக் கூட்டங்களையும், வாரியின் அலைகளையும், அச்சமுத்திரத்திலுள்ள மீன்களையும், ஒருவாறு எண்ணி அளவிடுதலும் கூடும். ஆனால் நாம் எடுத்த பிறவியை இத்தனையென்று அளவிட முடியா. ஆகையால் நாம் எடுத்த பிறவிகளில் எத்தனையோ தாய், எத்தனையோ தந்தை, எத்தனையோ மனைவி, எத்தனையோ புத்திரர், எத்தனையோ பந்துக்கள் எத்தனை

போ உளர். ஆனதால் இப்பிறவியை யொழித்துச் சிவபெருமான் திருவடிப் பேற்றையடைய இறைவனை வழிபடுதல் வேண்டும்.

இ-உ-ம்.

"எத்தனை தாயைக் கண்டோம்
எத்தனை தமரைக் கண்டோம்
எத்தனை மனைவியைக் கண்டோம்
எத்தனை மகவைக் கண்டோம்
எத்தனை யூரைக் கண்டோம்
எத்தனை பேரைக் கண்டோம்
சித்தமேதிரும்பா யீசன் றிருவடி காணுமாறே."

—சிவஞானவள்ளல்.

ஆகையால் இப்பிறவியை யொழித்து பேரின்ப வீடடைய விரும்பிய திருவெண்காடர், பத்திரகிரியார் முதலானவர்கள், முன்னைத் தவப்பேற்றால் அருந்ததியை யொத்த கற்பும், கலைமகளை யொத்த கல்வியும், மலைமகளை யொத்த கருணையும், நிலைமகளை யொத்த பொறையும், திருமகளை யொத்த வனப்பும், நளாகினி, வாசுகியாரை யொத்த பதிப்பணியும் நிறைந்துள்ள பத்தினியையும் உத்தமமான சற்புத்திரர்களையும் அகண்ட செல்வத்தையும்விட்டு மேற்சொன்ன மனைவி, புத்திரர், பொருள், முதலானதும் அவர்களுக்கு பெருந் துக்கமாய்த் தோன்றி கானவர் வலையிற்பட்டுக் கை தப்பியோடு மான்போல் போயினர். ஆனால் மேற்சொன்ன குணங்கள் சிறிதுமில்லாத மனைவி புத்திரர்களும் தாரித்திரியமும் நமக்குச் சொந்தமாயிருந்தும் அவைகளிடத்துத்

துக்கந் தோற்றாமல் சுகமாகவே நினைத்து இல்லறமாகிய பந்தத்திலுழல்கிறோம். ஆனாலிதற்கெல்லாம் காரணம் ஆசையேயாகும். எப்படியெனில் மூட்டை சுமப்பவனும், பல்லக்கெடுப்பவனும், கூலிவேலை செய்பவனும் தாங்களடையும் துக்கம் அதிகமாயினும் அவர்கள் கொண்ட பொருளாசையினால் அத்துக்கமான வேலையும் சுகமாயிருக்கிறது. அன்றியும் வாதநோய் வந்தவருக்கு ஆளேறி மிதித்தல் சுகமாயிருத்தல் போலவும், ஆசையும், மலநோயும் சம்பந்தப்பட்ட நமக்கு மேற்சொன்ன துக்கத்துக் கேதுவாகிய மனைவி புத்திரர் பொருள் முதலானவைகளெல்லாம் சுகம்போல் தோற்றுகிறது.

ஆனால் பிறவிமுதல் விட்டு நீங்காது வருகின்ற ஆசையும் மும்மல நோயும் இரண்டொரு சன்மத்தில் நமக்கு நீங்காது, பல பிறவிகளில் ஈசுரனை வழிபட்டால் தான் நம் ஆசை முதலானது மொழிந்து சிவஞானத்தை யடைந்து பேரின்ப வீடடையலாம். இதற்குத் திருஷ்டாந்தமாக விருத்தாசலம் குமாரதேவர் முன்னம் ஆறு சன்மங்களில் நிஷ்காமதவம் செய்து ஏழாவது சன்மத்தில் சிவஞானச் செல்வராய் விளங்கினர்.

ஆனதால் நாம் எடுத்த இப்பிறவியி லிப்பொழுதே குரு, லிங்க சங்கமமாக இவ்வுலகி லெழுந்தருளியிருக்கும் இறைவனைத் திரிகரணங்களாலும் வழிபடல் வேண்டும்.

உ

சிவமயம்.

கணபதி துணை.

ஈசுர வழிபாடு.

காப்பு.

விநாயகர்.

நம்பிக்கருள்புரியு நாகமுகத்தானை
உம்பரிடர்தீர்க்கு முத்தமனை—அம்புவியில்
வந்திக்குமன்பர் வல்வினையைத் தீர்ப்பானை
வந்திப்பாய் நெஞ்சே மகிழ்ந்து.

நடராஜர்.

பொன்னம்பலத்தாடும் புனிதன் கழல்போற்ற
இன்னலென்ப தெந்நாளுமில்.

சிவபெருமான்.

கங்கைவார் சடைக் கண்ணுதலெந்தையை
மங்கைபாகனை மால்விடை யூர்தியை
துங்கமான் மழுதாங்கிய தூயனை
எங்கள் பாவம் நலிய வணங்குவாம்.

அம்பிகை.

மலைய மன்னன் மாதவம் புத்திரி
சிலையை யொத்திரு நுதற்செல்விதன்
றுலையை யொத்த தூயமலர்ப்பதம்
நிலையதாய்த் தொழுவார்வினை நீங்குமே.

சண்முகர்.

அந்திவண்ணற் கருள்புரியண்ணலை
செந்தின்மா நகர்மேவிய செல்வனை
கந்த னெந்தையைக் கைதொழுவார் நிதம்
பந்தபாசமறுக்க வல்லார்களே.

சிவமயம்.

கணபதி துணை.

ஈசுர வழிபாடு.

சிவாலய அமைப்பு

"தாபர சங்கமங்க ளென்றிரண்டுருவினின்றும்
மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க்கருளை வைப்பன்

—சிவஞான சித்தியார்.

தாவரமென்பது ஆலயங்களி லமைக்கப்பட்ட சிவ மூர்த்தங்களாகும்.

ஆதலால், ஒவ்வொரு ஊர்களிலும் ஈஸ்வர ஆலயங்களமைத்து விதிப்படி நித்திய பூசையும் பஞ்சபருவாதி உற்சவ முதலானவைகளும் நடத்தல்வேண்டும். அப்படி தவறுமல் செய்துவந்தால் காலமழைபெய்து அதினுல் பயிர்கள் முதலானவை பலிதப்பட்டு அவர்கள் இம்மையிலே குடும்பத்தில் சுகத்தோடு நோய் முதலானதுமின்றி வாழ்ந்து மறுமையில் சிவபெருமான் திருவடியை யடைவர்.

அப்படி ஆலயங்களமைத்து பூசைமுதலானவை நடவாதிருந்தால் உலகத்தில் நோய் அதிகமாகும். மழை குறை

யும். அரசர்களுக்கு வலி குன்றும். சமுத்திரமும் நீர்வர ளும். கன்னங்களவு அதிகமாகும்.

இ - உ - ம்.

"ஆற்றருநோய்மிகு மவனி மழைகுன்றும்
போற்றரு மன்னரும் போர்வலிகுன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்களானவை
சாற்றிய பூசைகடப் பிடிற்றனே."

"முன்னவனார் கோயிற்பூசை கண்முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங்குன்றும்
கன்னங்களவு மிகுத்திடுங் காசினிக்
கென்னருணந்தி யெடுத்துரைத்தானே."

—**திருமந்திரம்.**

ஆனதால் அன்பர்கள் ஒவ்வொரு ஊர்களிலும் ஆல யங்களமைத்து நித்திய பூசைகளையும் உற்சவாதிகளையும் நடத்தல் வேண்டும். இப்படி செய்யவேண்டியிருக்க சில ஊர்களில் பழமையாக உள்ள ஆலயங்களுக்கு முன்னோர் களால் விடப்பட்ட நிலம் பொருள் முதலானவைகளை ஆல யத்திருப்பணி பூசை முதலானவைகளுக்கு உபயோகப் படுத்தாமல் ஆலயங்களைக் கெடுத்து தங்கள் குடும்ப சுய நலத்திற்கும், ஊர் பொதுவான விருதாகாரியங்களுக்கும் செலவழிக்கின்றனர். அந்தோ பரிதாபம்! இதனல் இவர் கள் இம்மையிலே பல துக்கமனுபவிப்பதோடு தேகாந்தியத் தியத்திலடையும் நரகத்துன்பம் அளவிடற் பாலதன்று. சிவாலயப் பொருளை அனுபவித்தவரடையும்நரகத்துன்பம்

முதலானவைகளின் விரிவை சிவதருமோத்திரம் என்னும் நூலில் கண்டு கொள்வாராக.

சிவாலயதரிசன விதி.

அன்பர்கள் காலையில் ஸ்நானஞ்செய்து தோய்த் துலர்ந்த வஸ்திரமணிந்து, விபூதி ருத்திராக்கதாரணஞ் செய்து ஆலயத்துக்குச் செல்லல் வேண்டும். அருகில் சென்றதும், தூலலிங்கமாகிய கோபுரத்தை நமஸ்கரித்து எழுந்து இரண்டு கைகளையும் சிரசின்மேல் குவித்து சிவ நாமங்களை யுச்சரித்துக்கொண்டு உள்ளே போதல்வேண் டும். போனவுடன் பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல்வேண்டும். கிழக்கு மேற்கு நோக்கிய சந்நிதானத் தில் வடக்கே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல்வேண்டும். தெற்கு வடக்கு நோக்கிய சந்நிதானத்தில் கிழக்கே தலை வைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும். கிழக்கிலும் வடக்கிலும் கால்நீட்டி நமஸ்காரம் பண்ணலாகா. புருடர்கள் அஷ்டாங்க நமஸ்காரம் பண்ணல் வேண்டும். அவை தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு, என் னும் எட்டவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங் குதலாகும்.

ஸ்திரீகள் பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணல்வேண்டும். அவை தலை, கையிரண்டு, முழங்கால் யிரண்டு என்னும் ஐந்தவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குத லாம்.

நமஸ்காரம் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது தரம் பண்ணல்வேண்டும். ஒருதரம், இருதரம் பண்ணுதல்

குற்றம். பிறகு இரண்டு கைகளையும் சிரசிலேனும் மார்பிலேனும் வைத்து சிவநாமங்களை யுச்சரித்துக்கொண்டு கால்களை மெள்ளவைத்து பிரதக்ஷணம் பண்ணல் வேண்டும், மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது தரம் பண்ணல் வேண்டும். பிறகு முதலில் விநாயகரை தரிசனஞ்செய்து முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் கன்னத்திலே மும்முறை குட்டி வலக்காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையின்னலும் பிடித்துக்கொண்டு மூன்றுமுறை தாழ்ந்தெழுந்து கும்பிடுதல்வேண்டும். பிறகு உள்ளே சென்று நந்தியெம்பெருமானைத் தரிசித்து அவர்பால் சிவபெருமானை தரிசிக்க விடைபெற்று உட்சென்று சிவலிங்கப் பெருமானையும் உமாதேவியாரையும் தரிசித்து விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு ஆலயத்து உட்பிரகாரம் மூன்று அல்லது ஐந்துதரம் வலம் வந்து பிறகு சபாபதி, தக்ஷணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளை தரிசனஞ் செய்தல்வேண்டும். அபிடேகம் நிவேதனம் முதலானவை நடக்கும்போது தரிசனஞ் செய்யலாகாது. அபிஷேக காலத்தில் பிரதக்ஷண நமஸ்காரங்கள் உட்பிரகாரத்தில் பண்ணலாகாது. ஆலய தரிசனம் முடிந்தவுடன் சண்டேச்சுரர் சந்நிதியை யடைந்து மும்முறை கைகொட்டி சிவ சந்நிதானத்தில் கொடுத்த வில்வத்தை அவர்மீது சாற்றி சிவதரிசன பலத்தைத் தரும் பொருட்டு பிரார்த்திக்கவேண்டும். பிறகு சந்நிதானத்திற்கு நேரே பலி பீடத்தினிடம் வந்து நமஸ்காரம்செய்து உட்கார்ந்து பஞ்சாக்கரத்தை நூற்றெட்டு உரு ஜெபித்து எழுந்து மீண்டும் நமஸ்கரித்து வீட்டுக்குப் போதல்வேண்டும்.

இப்படி தினந்தினம் தவராமல் காலை, நடுப்பகல், மாலை இம்மூன்று காலங்களிலும் ஆலய தரிசனஞ் செய்தல் வேண்டும். தினப்படி தரிசனஞ்செய்ய இயலாதவர்கள் சோமவாரம், சுக்கிர்வாரம், பிரதோஷம், பௌரணை, அமாவாசை: திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, வருஷப் பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, நவராத்திரி முதலிய புண்ணிய காலங்களிலாயினும் தரிசனஞ் செய்தல்வேண்டும்.

ஆலயத்துக்குச் செல்லும்பொழுது ஆசாரமில்லாது போதல், கால்கழுவாது போதல், எச்சில் உமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்கு நீர் சிந்துதல், ஆசனத்திருத்தல், சயனித்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், மயிர்கோதி முடித்தல், சூதாடல், தாம்பூலந்தரித்தல், சிரசிலே வஸ்திர மணிதல், தோளிலே உத்தரீய மிட்டுக்கொள்ளுதல், சட்டையிட்டுக்கொள்ளுதல், பாதரட்சை போடல், நிருமாலியத்தைக் கடத்தல், மிதித்தல், தூபி, துசஸ்தம்பம், பலி பீடம், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல், பரஸ்திரீகளையும், தாசிகளையும் பார்த்தல், ஆடையாபரண அலங்காரஞ்செய்து போதல், சண்டையிடுதல், விளையாடுதல், சுவாமிக்கும் பலி பீடத்துக்கும் குறுக்கேபோதல் முதலானவை குற்றங்களாகும்.

நாம் எடுத்த சரீரம் இந்திரியம் மனம் முதலிய ஒவ்வொன்றினுலும் இறைவனை வழிபடுதலே பெறும்பலனுகும்.

இ - உ - ம்.

"கண்ணுதலாலயநோக்குங் கண்களேகண்கள்
கறைக்கண்டன்கோயில்புகுங் கால்களேகால்க்ள்
பெண்ணொருபாகனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப்பூசிக்குங் கைகளேகைகள்
பண்ணவன்றன்சீர்பாடும் நன்னாவேநன்னா
பரன்சரிதையேகேட்கப்படுஞ் செவியேசெவிகள்
அண்ணல்பொலங்கழனிணைக்கும் நெஞ்சமேநெஞ்சம்
அவனடிக்கீழடிமைபுகு மடிமையேயடிமை."

—**பிரமோத்தரகாண்டம்.**

இவ்வாறு சிவபெருமானை வழிபடாத மனித சரீரங்களெல்லாம் ஐயறிவுடைய மிருகம் முதலானவைகளுக்குச் சமானமாகும்.

ஆலயங்களி லெழுந்தருளியிருக்கும் சிவ முகூர்த்தங்கள் யாவர் எந்த வண்ணமாக விருப்பங்கொள்ளுகின்றார்களோ அந்தவண்ணமாகவுளது. இறைவன் ஒருவன் உளன் என்பார்க்கு மூலஸ்தானத்தில் சிவலிங்க சொரூபமாகவும், கடவுளும் நம்போல் சம்சார பந்தமுடையவரென் றெண்ணுபவருக்கு சோமாஸ்கந்த மூர்த்தமாகவும், சிறார்களாக வந்து தரிசிப்பவர்களுக்கு விநாயகர், சுப்பிரமணியர் என்கிற பிள்ளைத் திருவுருவந் தாங்கியும் ஸ்திரீகளாக வந்து தரிசிப்பவர்களுக்கு பராசத்தி உருவமாயும், சர்வ சங்கபரித்தியாகஞ் செய்த பெரியார் காட்சிக்கு தக்ஷிணாமூர்த்தி கோலமாகவும், மகாராஜாவாக வந்து தரிசிப்பவருக்கு நடராஜாவாகவும், பிக்ஷையேற்றுண்பவர் வந்து தரிசிக்குங்

காலத்து பிக்ஷாடன மூர்த்தமாகவும், இன்னம் யாவர் யாவர் எந்தெந்த வண்ணம் விருப்பங் கொள்ளுகின்றனரோ அந் தந்த வண்ணம் யிறைவன் பல மூர்த்தங்களாக எழுந்தருளி யுள்ளார். இவ்வண்ணம் எழுந்தருளியுள்ள கடவுள் ஆல யங்களில் சென்று தரிசிப்பதற்கு எண்ணமின்றி வீட்டி லிருப்பவர்களுக்கும் தாமே யவர்களிருக்கும் வீதிகளிற் சென்று தரிசனை கொடுக்க எழுந்தருளி வருகின்றனர். உல கத்தில் சாதாரணமாக யிருக்கும் ஒருவர் வந்தால் அவ ரைப் பார்க்க பலருக்கும் மதிப்பு வருவதில்லை. டம்பாகார மாக ஆடையாபரண அலங்காரத்தோடு பல்லக்கு முதலான வைகளிலேறி பல வாத்தியங்கள் கோஷிக்க ஒருவர் வருவா ராயின் பலருஞ் சூழ்ந்து அவரைப் பார்ப்பதற்கு முந்து வார்கள். இதைக்கருதியே நம்மிறைவனும் பல ஆடையா பரண அலங்காரத்தோடு பல வாத்தியங்கள் கோஷிக்க இடபத்தின்மீதும், குதிரையின்மீதும், யானையின்மீதும், இரதத்தின்மீதும், பல்லக்கின்மீதும் எழுந்தருளி வருவா ராயினர். இந்த உன்னத நிலையோடு தங்கள் வீதியிலெழுந் தருளி வருங்காலத்தும் வீட்டைவிட்டு வெளிவந்து பெரு மானை தரிசியாத பேரன்புடைய பெருந்திருவாளரும் சில ருளர்.

சங்கமமென்பது அடியவர் ஆசாரியர் என்பதாகும்.

அன்பர் பணி

உலகத்தில் சிவபெருமான் குருலிங்க சங்கமமென்று கொண்ட திருவுருவத்தில் சங்கம உருவமே மேலானது. சிவனடியாரை வழிபடுதலே பேரின்ப வீடடைவதற்கு முக்

கிய சாதனமாகும். சிவாலய வழிபாடு செய்து அவனடியார்களை வழிபடாராயின் அவர் மோக்ஷவீடடையார். அடியார்களை வழிபடுவோர் சிவாலய வழிபாடு செய்யாவிடினும் அவர் சிவபெருமான் திருவடியை யடைதல் திண்ணம். இக்குருலிங்க சங்கமத்திற்கு ஓர் பசுவை உவமையாகக் கூறுவாம். பசுவின் ஸ்தனம் இலிங்கம். அதன் சரீரம் குரு. அதன் முகம் சங்கமம் (அடியவர்.) அப்பசுவினுல் நாமடையும் பயன் ஸ்தனத்தின் மூலமாய் வரும் பாலாகும். இது போல் சிவலிங்கப் பெருமானுல் நாமடைவது மோக்ஷம். ஆனுல் அந்த பசுவின் தனத்துக்கு உவமையாகச் சொன்ன சிவபெருமானுர் வீடென்னில் அவரையே வழிபட்டு மோக்ஷமடையலாமென்னில் அவ்வீடு கிட்டாது. எப்படியெனில் ;

பசுவினது ஸ்தனந் தானே பாலைத் தருவதென்று அதற்கு புல் தவிடு கொள் முதலானது கொடுத்தால் அவை உண்ணுமா, உண்ணுது. ஆனுல் அப்பசுவினிடத்துப் பாலை நாம் குறித்த காலங்களில் பெறவேண்டுமானுல் மேற்சொன்ன உணவுகளை சங்கமத்துக்குவமை கூறிய அப்பசுவின் முகத்தினிடத்திலளித்தால் அதுவுண்டு அவ்வாகாரசத்து, குருவாக உவமித்த சரீரத்தில் பரவி பிறகு சிவலிங்கப் பெருமானுக உவமித்த முலைக்காம்பின் வழி பாலாக நமக்கு பயன் தரும்.

இதுபோல் சிவனடியார்களை வழிபட்டால் சிவலிங்கப் பெருமான் தாமே பேரின்பவீடு கொடுக்க சித்தமாயிருக்கிருர். அப்பசுவுக்கு உணவு கொடாவிடில பாலைப்பெறு

வாரில்லை. அதுபோல, சிவனடியார்களை வழிபாடு செய்யாதவர்களுக்கு சிவபெருமான் மோக்ஷங் கொடாரென்பது நிச்சயம்.

இ - உ - ம்.

"கோதனத்தின் முலையிலிங்கங் குருவாமேனி
கூறிய சங்கமமுகமாங் குலவுங் கீரம்
போதமுலைப் பொழிந்திடு மென்றதற் கன்பாகப்
புல்லளிக்கி லருந்திடா வுடலுங் கொள்ளா
நீதியினலறிந்து முகத்தளிக்கி லெங்கு
நிறைவாகுமுத்தி, சிவலிங்கத்தேனும்
ஏதமில்சங்கமத்தை வழிபடுவோர்க்கன்றி
யெய்தரிய பேரின்ப மெய்தொணுதே."

—பரமரகசிய சதுட்டயம்.

அன்றியும், ஆலயங்களில் சிவபெருமானுக்கு அபிடேக வலங்கார நிவேதனஞ்செய்தால் அது சிவனடியார்களுக்கு திருப்தியாகாது. சிவனடியார்களுக்கு மகேசுர பூசை முதலானது செய்தாலது சிவபெருமானுக்கு திருப்தியாகும்.

இ - உ - ம்.

'படமாடக் கோயிற் பரமற் கொன்றீயி
னடமாடுங் கோயி னம்பற் கங்காகா
னடமாடுங் கோயி னம்பற் கொன்றீயிற்
படமாடுங் கோயிற் பரமற்கங்காமே.' —திருமந்திரம்.

ஆனல் உலகத்தில் தற்காலத்தில் உத்தம அடியார் களைப்போல விபூதி உருத்திராக்கம் முதலானது மேல

ணிந்து கொலை, மதுமாமிச பக்ஷணம், பிறர் பொருள் கவர்தல், பரஸ்திரீகமனம் முதலான துர்க்கிருத்தியம் செய்கின்றனர். இவர்கள் புறத்து உயர்வாகிய வேடம் பூண்டு அகத்து துராசாரமுடைய இவர்களை அறிக்கடவுள் இருபத்தெட்டுகோடி நரகத்தில் நெடுங்காலம் அழுத்தி வருத்துவன். எது போலெனில் சாதாரணமாயிருக்கப்பட்டவொருவன் இராஜாங்க அதிகாரியைப்போல் வேடம் பூண்டு ஓரிடம் சென்று அதிகாரஞ் செய்வானாயின் ராஜாங்கத்தார் அவனைப் பிடித்து கடுந் தண்டனை விதிப்பதுபோலாகும். ஆனதால் புறத்தே யணிந்திருக்கும் திருவேடத்திற் கொக்க உள்ளத்தின் கண்ணும் சிவகாருண்ணியம், ஈசுரபக்தி, நிராசை முதலானது முள்ளவர்களே மெய்யன்பர்களாகும். இவ்வகைப் பட்டவர்களுக்கு இல்லறத்தார் பசி வந்த காலத்து உணவும், வியாதி வந்த காலத்து மருந்தும், குளிர் மழை முதலானது வந்த காலத்து இடமும் ஆடையும் உதவல் வேண்டும்.

இ - உ - ம்.

> "துறந்தார்க்குத் துப்புறவு வேண்டி மறந்தார்கொல் மற்றையவர் கடவம்."
>
> —திருக்குறள்.

அன்றியும் சிவபெருமான் தெய்வ உருவினில் ஒரு கணமும், இராஜ சமுகத்தில் இருகணமும். வேத அத்தியயனஞ் செய்யும் பிராமணர் கூட்டத்து வில்லினிடம் தொடுத்த அம்பானது சென்று விழுமளவும் துரியநிலை யடைந்த மகான்களுள்ளத்தில் எக்காலமுந் தங்கி யுள்ளார்.

இ-உ-ம்.

"ஒருகணமிருப்பின் றெய்வ வுருவினி லீசன்றுன்மற்
றிருகணஞ் செங்கோலோச்சு மிறையவர் பாலிருப்பன்
அருமறையவர் குழாத்துளம்பு வீழளவிருப்பன்
துரிய யோகிகளுளத்திற் றாங்குவனிருந்தெப்போதும்.

—சிவஞானவள்ளல்.

இத் துரியநிலையடைந்த மெய்ஞ்ஞானிகளுக்கு உண்டியும் சிறிது பொருளு மவருக்களித்தால் அது நிலம் மலையைப்போல் அகன்றும் உயர்ந்தும் அத்தானஞ் செய்த பத்தருக்கு மறுமையில் சிவ சாலோகாதி பதவின்பங்களை அனுபவிக்கச் செய்து சனனமரணக் கடலின் கண் அழுந்தாவண்ண மெடுத்து பாசத்தினை யறுக்கத் தவஞ்செய்தற்குரிய உயர்ந்த ஒரு பிறவியை அடையச்செய்து அப்பிறவியில் சரியை கிரியை யோகங்கள் எளிதிற் கைகூடி முற்றுப் பெறச் செய்து முடிவின்கண் உண்மை ஞானநெறியை தலைப்படுத்தி சிவபெருமானது திருவடிக் கமலங்களை எய்துவிக்கும்.

இ-உ-ம்.

சிவஞானச் செயலுடையோர் கையிற்றானந்
 திலமளவே செய்திடினுநிலமலை போற்றிகழ்ந்து
பவமாயக்கடலி னழுந்தாத வகையெடுத்துப்
 பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத்

தவமாளும் பிறப்பொன்றிற்சாரப் பண்ணி
சரியைகிரியா யோகந்தன்னிலுஞ்சாராமே
நவமாருந்தத்துவ ஞானத்தை நல்கி
நாதனடிக்கமலங்கண்ணு குவிக்குந்தானே.

—சிவஞான சித்தியார்.

குரு பத்தி.

உலகத்தில் ஆன்மகோடிகள் பிறவிப்பிணியைப் போக்கி பேரின்ப வீடடையச் செய்வதற்கு சிவபெருமான் கொண்ட திருவுருவம் மூன்றனுள் குருவோர் உருவமாகும். இறைவன் ஆன்மாக்களது இருவினையொப்பு மல பரிபாக காலமறிந்து, அவரது ஊரும் பேரும் உருவும் ஒழிக்கவேண்டி ஊரும் பேரும் உருவுங்கொண்டெழுந்தருளுவ ரென்பது நூல் சம்மதம்.

"மறைமுடிவதனில் விளங்கிடுமொளியே மனிதரைப்
போல வந்தெனது
சிறைதவிர்த்தாண்ட சிவப்பிரகாச தேசிகன்,"

என்றார் பெரியாரும். ஆனதால் உத்தம சிடர்கள் குரு சந்நிதானத்தில் தொண்டுசெய்து அவர் திருவுருவத்தை தரிசித்தலும், அவர் அரும்பெரும் வாக்கியார்த்தங்களைக் கேட்டலும், அவருடைய திருநாமத்தை செப்பலும், அவரது திருவுருவத்தை மனதின்கண் சதாகாலமுஞ் சிந்தித்தலுமே பிறவிப்பிணி யொழித்து பேரின்ப வீடடைதற்கு முக்கிய சாதனமாகும். இதற்கு சான்றாக பெருமிழலைக்குறும்பர் என்னும் பெரியார் வன்றொண்டப் பெருமானை தரிசித்து அவரையே குருவாகக்கொண்டு அவரையே சதாகாலமும்

மனதினுல் தியானித்து வந்ததனுல் அவர் இம்மையில் அணி மாவரதி அட்ட சித்திகளையுமடைந்து முடிவில் சுந்தர மூர்த்தி சுவாமிகள் கைலைக்கு நாளை எழுந்தருளுவதை குருத்தியான பலத்தினுலறிந்து முன்னுளே திருக்கைலாய மடைந்தனர்.

இ - உ - ம்

"தெளிவு குருவின் றிருமேனிகாண்டல்
தெளிவு குருவின் றிருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் றிருநாமஞ்செப்பல்
தெளிவு குருரூபஞ் சிந்தித்தரூனே."

—**திருமந்திரம்.**

இ - உ - ம்

"அடுத்ததின்றன்மையான்மா வாகுமென்றறிந்து நல்லோர்
நடித்திடுஞ் சமயவாத நற்றவஞ் செபந்தியானம்
படிற்றுலகியற்கையாவும் பரகதி விலக்காமென்றே
விடுத்தருட்குரவன் பாதம் மேவிமெய்ப்பணி செய்வாரே"

—**வீராகமம்.**

இதனுல் குரு சந்நிதானத்தில் தொண்டுசெய்து இனிப் பிறவாநெறியை யடையலாமென்பது நமக்கு நன்கு விளங்குகின்றது.

திரிகரண சுத்தியடைதல்.

நம் மனம்மொழி மெய்களால் உண்டாகிய வழக்கை சிவபெருமான் திருவடித் தாமரைகளில் மனமொழி மெய்களால் அன்பைச் செலுத்தி போக்குதல் வேண்டும்.

இவற்றுள் மனதுக்குண்டாகிய அழுக்காவன. பொருமை, ஆசை, கோபம், முதலானவை. இதைப் போக்குதற்கு மூர்த்தி தியானம் பஞ்சாக்கரதியானம் செய்தல்வேண்டும். இம்மூர்த்தி தியானத்தால் முன்னிருந்த பெரியார்கள் சிவ ஞானச் செல்வராய் உலகத்தில் பல அற்புதங்களையுங் காட்டினர் நம்பியாண்டார். நம்பிக்கு விநாயகப்பெருமானும், உமாபதி சிவாசாரியருக்கு நடராஜப்பெருமானும், குமாரதேவருக்கு பெரியநாயகியாரும், குமரகுருபர சுவாமிகளுக்கு செந்திலறுமுகப் பெருமானும், உபாசனமூர்த்தம் இன்னும் பல பெரியார்கள் இம்மூர்த்ததியானத்தால் பலவற்புதங்களை விளக்கினர். ஆனதால் மனேவழுக்கைப் போக்குதற்குமூர்த்தி தியானம்பஞ்சாக்கர தியான என்னும் புனலைக் கொண்டவ் வழுக்கைப் போக்கவேண்டும்.

வாக்குக்குண்டாகிய வழுக்கு பொய் சொல்லுதல், புறங்கூறல், கடுமொழி கூறல் முதலாயின. இவ்வழுக்கைப் போக்குவதற்கு பஞ்சாக்கர செபமும் தேவார திருவாசகம் முதலியதோத்திர பாராயணமும் என்னும் புனலைக் கொண்டவ் வழுக்கைப் போக்கவேண்டும்.

காயத்திஞலாகிய் வழுக்கு பிறரை தண்டித்தல், பரஸ்திரீகமனஞ் செய்தல், சூதாடல் முதலியன. இவ்வழுக்கைப் போக்குவதற்கு சிவபெருமானை பத்திர புஷ்பங்களைக் கொண்டு பூசை செய்தல்,சிவாலய தரிசனஞ் செய்தல், ஆலயத்திருத்தொண்டு செய்தல் முதலான புனலைக்கொண்டு போக்குதல் வேண்டும்.

இவ்வண்ணம் தவருமல் சிவபெருமானை மனமொழி

மெய்களால் வழிபடுபவரே பந்தத்தை யறுக்கவல்ல சிவ பத்தரென்று சொல்லப்படுவார்.

இ - உ - ம்.

திருக்குறுமழுக்காறவாவொடு வெகுளி
செற்றமாகிய மனவழுக்கை
தியானமென புனலால் பொய்புறங்கூறல்
தீச்சொலென்கின்ற வாயழுக்கை
அருட்கிளர் நினது துதியெனும் புனலா
லவத்தொழிலென்னு மெய்யழுக்கை
அருச்சனையென்னும் புனலினாற்கழுவா
வசுத்தனே னுய்யு நாளுளதோ.

—கைத்தல மாலை.

கருத்திடை நினது கருணை மாமேனிகண்
டெழுத்தைந்து நாவியம்பச்—சிரத்தினி
லமைத்த கரத்தொடு நினையான்றினம்
வலம்புரியு மாறருளாய். —சோண சைவமாலை.

சந்திர சேகரன் றன்னை நல்லர
விந்தமென் மனமொழி மெய்யினாற்றினம்
வந்தனை புரிபவன் யாவன் மற்றவன்
பந்தம தறுசிவ பத்த னாகுவான்.

—சித்தாந்த சிகாமணி.

"வாக்கிலிருப்பதவன் றிருநாம மனந்தனிலே
தாக்கியிருப்பதவன் றிருமேனி தரணிதனிற்
போக்கியிருப்பதவ னேவலென் றும்பு புகழ்ந்துமறை
காக்குங்கருணைச் சிற்றம்பலநாடியைக் கண்டபின்னே.

—சிற்றம்பல நாடிகள்.

ஆகையால் நம்மனவாக்கு காயமானது சொரூபத்தியானம் பஞ்சாக்கரதியானம் தோத்திரம் சிவபூசை சிவாலயத் திருப்பணி முதலானவைகளில் எப்பொழுதும் சிரத்தையுடனிருக்கவேண்டும்.

ஆனால் இவ்வண்ணம் சிவபெருமானை திரிகரணங்களால் வழிபடுங்காலத்து காமியார்த்தமாக இகலோகபோகமாகிய பொருள் முதலானவைகளைக் கருதி வழிபடுதல் மேலானதல்ல. ஆனால் இவ்வண்ணம் விரும்பி வழிபடுபவருக்கு இறைவனருள்புரியத் தடையில்லை. ஆனாலிவன் விரும்பியவளவு பலன் கொடுப்பரேயொழிய பிறப்பிறப்பையொழித்து பேரின்ப வீடடையும் பலனைக் கொடார். ஆனதால் பிறவியை யொழித்து பேரின்பவீடடைய வழிபடுதலே மேலானதாகும்.

இ - உ - ம்.

"வாழ்த்துவதும் வானவர்க
டாம்வாழ்வான் மனநின்பாற்
றாழ்த்துவதுந் தாமுயர்ந்து
தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந்
தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான்
யானுமுன்னைப் பரவுவனே." —திருவாசகம்.

"வஞ்சநமன்வாதனைக்கும் வன்பிறவிவேதனைக்கும்
அஞ்சியுனையடைந்தேனையா பராபரமே!'

—தாயுமானவர்.

அன்றியும் ஊழ்வினையின் வசத்தால் சரீரத்துக்கு எவ்வகையான இன்ப துன்பம் வந்தபோதிலும் இறைவன் திருவடித் தாமரையை மறவாதிருக்கவேண்டும்.

"பொய்யநரகம் புகினுந் துறக்கினும போந்துபுக்கிங்
குய்யாவுடம்பினே டேர்வநடப்ப பறப்பவென்று
நையாவிளியினு நாணிலமாளினு நான்மறைசேர்
மையார்மிடற்று னடிமறவாவரம் வேண்டுவனே"

—**பொன்வண்ணத்தந்தாதி.**

இதன்றியும் குமாரகுருபர சுவாமிகள் இம்மைப் பயனைக் கருதாது நடராஜப்பெருமானை கேட்ட வரமாவது.

"மல்லலம் பொழில்சூழ் தில்லை வாண
வரமொன் றிங்கெனக் கருளல் வேண்டும்

அதுவே

பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி
பலதொடுத் திசைத்த வொருதுணி யல்லது
பிறிதொன்று கிடையா தாக வறுமனைக்
கடைப்புறத் திண்ணை யல்லது கிடைக்கைக்
கிடம்பிறி தில்லை யாகக் கடும்பசிக்
குப்பின் றட்ட புற்கையூ ணல்லது
மற்றோ ருண்டி வாய்விட் டாற்றினு
மீகுந ரில்லை யாகநா ளுமொ
மொழுக்க நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர் குழாத்தொடும் வைக வித்திற
முடனீங் களவு முதவிக் கடவுணின்

பெரும்பத மன்றி யான் பிறிதொன்
றிரந்தனன் வேண்டினு மீந்திடா ததுவே."

—சிதம்பர மும்மணிக்கோவை.

"இறவாத வின்பவன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமைவேண்டும் மீண்டும் பிறப்புண்டே
லுன்னையென் றும்
மறவாமை வேண்டுமின் னும் வேண்டும்
நான்மகிழ்ந்துபாடி
யறவாநீ யாடும்போ துன்னடியின்
கீழிருக்கவென்றார்." —பெரிய புராணம்.

இச்சரீரமெடுத்தது இறைவனை வழிபட்டு பேரின்ப வீடடைவதற்கேயாம்.

"உடம்பினைப்பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினி லுத்தமனைக்காண்."
"உடம்பினாற்பெற்ற பயனாவதெல்லாந்
திடம்பட்டீசனைத் தேடு." —ஔவைக் குறள்.

ஆனால் இவ்வருமையான சரீரமெடுத்தவருட் சிலர் ஆயுள் பரியந்தம் இல்லறத்தில் துன்ப மனுபவிப்பதுமன்றி எளியாரை எதிரிட்டுக்கொண்டு விருதா வழக்குத் தொடுத்தும் பஞ்சமாபாதகஞ் செய்தும் இதனால் தேகாந்தியத்தில் நிரயத் துன்பமனுபவித்து தாழ்வான பிறவியை யடைகின்றனர். இதை நோக்குங்கால் தன் பகைவரை வெல்வதற்கு கடவுளை நோக்கி நெடுநாள் தவஞ்செய்து மந்திரவாள் பெற்ற ஒருவன் அதைக்கொண்டு தன் பகைவரைவென்று

ஜெயமடையாது அவ்வாளைக் கொண்டு தன் சரீரத்தை யறிந்து தனக்குத் தானே துக்கத்தை விளைவித்துக் கொள் வதை யொக்கும்.

வெண்பா

இ - உ - ம்.

"மந்திரவாட்பெற்றும் பகைவெல்லான்மற்றதுகொண்
டந்தோதன்மெய்யை யரிந்தான்போன்—றிந்தவுடல்
கொண்டுமுத்திசெல்லுங் குறிப்பின்றிச்சிற்றின்பங்
கண்டுவினைக் காளாங் கணக்கு."

—**சித்தாந்த கரணம்.**

இறைவன்றிருவருட்பேறே சுகம்.

உலகத்தில் ஒருவருக்கு பொன் பூமி முதலானதும் பிரியம். அதனினும் மனைவி புத்திரர் மேலான பிரியம். அதனினும் தேகம் பிரியம். அதனினும் இந்திரியம் பிரியம். அதனினும் சீவன் பிரியம் .அதனினும் சிவமே மேலான பிரிய வஸ்துவாகும். அன்றியும் உலகத்தில் அரசுபுரியும் அரச ரடையும் சுகமும் விண்ணுலகில் இந்திரன், குபேரன் முத லானவர்களடையுஞ் சுகமும் பாதாளலோகத்தில் தட்சகன், ஆதிசேடன் முதலானவர்களடையுஞ் சுகமும், இன்னம் உலகத்தில் ஏனைய செல்வந்தர்களடையுஞ் சுகமும் சொல்லு மிடத்து சிவானந்தமாகிய சமுத்திரத்தில் எழுந்த ஓர் திவலையாகும் என ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். ஆகை யால் சிவபெருமானை வழிபட்டு அவ்விறைவன் றிருவரு ளால் சிவானந்த வாரிதியில் மூழ்கிய சுகமே மேலான தாகும்.

இ - உ - ம்.

"என்னிலாரு மெனக்கினியாரில்லை
என்னிலும்மினியா னொருவன் னுளன்
என்னுளே யுயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக்
கென்னுளேநிற்கு மின்னம்பரீசனே."
"கனியினுங்கட்டி பட்டகரும்பிலும்
பனிமலர்க்குழற் பாவைநல்லாரினும்
தனிமுடிகவித்தர்ளு மரசினும்
இனியன்றன் னடைந்தார்க் கிடைமருதனே"

—தேவாரம்.

இ - உ - ம்

"மன்னராவாருறு சுகமும்
வானோர் மகிழ்ந்துபெறு சுகமும்
மணிப்பை நாகத்தவர் சுகமும்
மற்றையோர்களடை சுகமும்
பன்னுமிடத்திற் சிவத்தெழுந்த
பரமானந்த லேசமெனப்
பகர்ந்தாய் குருவாயெழுந்தருளிப்
படிறேன் மறந்திங் குழல்கின்றேன்."

—திருப்போரூர்ச் சன்னிதி முறை.

இறைவன் றிருவுருவம்.

உலகத்தில் சிவபெருமானுக்கு தனக்கென ஓர் திருவுருவம் இல்லை. வழிபடு மன்பர் நிமித்தமே திருவுருவங் கொள்வதாகும். இவை மந்திரத் திருமேனி, தியானத் திருமேனி, கருணைத் திருமேனி முதலானவாகும். இறை

வன் மந்திரமே திருமேனியாக வுடையவரென்பதை (கூற்றை யஞ்சவுதைத் தனவஞ்செழுத்துமே) என திருஞான சம்பந்த சுவாமிகள் கூறியுள்ளார். அன்றியும் நடராஜப் பெருமான்றிருவுருவம் பஞ்சாக்கர சொரூபமேயாம். இதை சித்தாந்த சாத்திரம் உண்மை விளக்கமென்னும் நூலிற் காண்க.

இரண்டாவது தியானத் திருமேனி.

இரண்டாவது யார் யார் எந்த வண்ணமாகத் தியானிக்கின்முர்களோ அந்த வண்ணமாக அவர் மனதில் எழுந்தருளுவது. இதை வாகீச மூர்த்திகள் (ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே யவ்வுருவாய் நின்கின்றவருளுந் தோன்றும்) எனக் கூறியுள்ளார். அன்றியும் பிரமன், விஷ்ணு, இந்திரன், சூரியன், சந்திரன் முதலானவர்களுடைய உருவமும் தியானிப்பவர் உள்ளெழுந்தருளும் திருவுருவமும் நம்மிறைவன் திருவுருவமேயாம்.

இ - உ - ம்

"சுருதிவானவனும் திருநெடுமாலாம்
சுந்தர விசும்பின் இந்திரனும்
பரிதிவானவனும் படர்சடை முக்கட்
பகவனும் அகவுயிர்க் கமுதாம்
எருதுவாகனனும் எயில்கள் மூன்றெரித்த
ஏறு சேவகனுமாம் பின்னும்
கருதுவார் கருதுமுருவ மாங்கங்கை
கொண்ட சோளேச்சரத்தானே."

—திருவிசைப்பா.

இ - உ - ம்

"பெருகிய பேரருளுடையா ரம்பலத்தே நடிக்கும்
பெருந்தகை யென்கணவர் திருப்பேர் புகலென்கின்றாய்
அருகர் புத்தராதி யென்பேன் அயனென்பேன் நாரா
யண னென்பேன் அரனென்பேன் ஆதிசிவனென்பேன்
பருகு சதாசிவமென்பேன் சத்திசிவமென்பேன்
பரமமென்பேன் பிரமமென்பேன் பரப்பிரமமென்பேன்
திருவுசுத்தப் பிரமமென்பேன் துரியநிறைவென்பேன்
சுத்தசிவமென்பேனிவை சித்துவிளையாட்டே.

—இராமலிங்க சுவாமிகள்.

மூன்றாவது கருணைத் திருமேனியாவது

பாணபத்திரர் நிமித்தம் விறகு சுமை தாங்குபவராய் எழுந்தருளியதும், அருச்சுனன் நிமித்தம் வேடுவ வுருவந் தாங்கி பன்றியின் பின் வந்ததும், வாதவூரடிகள் வந்தியார் நிமித்தம் மண்ணெடுக்கும் மள்ளராய் எழுந்தருளியதும், திரிசிரபுரத்தில் ஒரு வணிகப்பெண் பிரசவநிமித்தம் அவள் தாயார்போல் திருவுருவமெடுத்து வந்ததும், பன்றிக்குட்டிகளுக்கு பாலூட்ட வராக வுருவமெடுத்தருளியது முதலானவைகளெல்லாம் அன்பர்களிடத்து வைத்த கருணையினிமித்தம் கொண்ட திருவுருவமாகும்.

சர்வமத சம்மதம்.

உலகத்தில் அருகபுத்த முதலான சமயங்கள் பலவுள. இச்சமயங்களெல்லாம் இறைவனா லுண்டாக்கப்பட்டதேயாம். ஆனால் சைவ சமயம் உயர்ந்ததாயிருக்கவும்

கீழாகிய சமயங்களை யெல்லாம் கடவுள் உண்டாக்கிய காரணம் என்னையெனில் சீவர்கள்செய்த கன்மத்துக் கீடாக அறிவு முதலான வந்தக் கரணங்கள் உயர்வு தாழ்வாயிருப்பதனுல் அவரவர்க்கேற்ப மதங்களும் சோபன மாக அமைக்கப்பட்டுள்ளது. அவரவர் செய்யும் வழி பாட்டிற்கும் அனுக்கிரகிப்பவர் இறைவனேயாம். இதைப் பற்றி தாயுமானவரும் (ஆறு சமயங்கடொறும் வேறு வேருகி விளையாடு முனையாவர றிவார்) எனவும்,

(மதங்கள் தொறும் நின்றகுருவே) எனவுங் கூறி யுள்ளார்.

ஆதலின் இறைவனுலுண்டாக்கப்பட்ட இம் மதங்கள் எக்காலமும் அழிவின்றி நிற்பதாகும். இவைகளெல்லாம் சைவசமயத்தை யடைவதற்கு சோபனமாகும்.

இ - உ - ம்

“புறச் சமயநெறி நின்றுமகச் சமயம்புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச்சிரம
வறத்துறைகளவை யடைந்து மருந்தவங்கள்புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்முற்சைவத்
திறத்தடை வரிதிற்சரியை கிரியாயோகஞ்
செலுத்திய பின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்.”

—**சிவஞான சித்தியார்.**

என்னும் ஆன்ருேர் வாக்கை யுணரத்தக்கது.

ஆனால் இம்மதங்கள் சைவசமயத்தை யடைதற்கு சோபானமாயிருப்பதானுல், முன்னம் திருஞான சம்பந்த சுவாமிகளும். திருவாதவூரடிகளும் சமண் சமயத்தையும் பௌத்த சமயத்தையும் வாதில்வென்ற காரணம் யாதெனில் அவர்கள் சமயத்தளவு நில்லாது நம் சமயத்தில் பிரவேசித்தனர். எப்படியெனில், மதுராபுரியில் எண்பெருங்குன்றத்து எண்ணுயிரவராகிய சமணர்கள் புகுந்து கூன்பாண்டியன் முதலானவர்களையும் சைவசமயத்திற்குரிய விபூதி ருத்திராக்கதாரணஞ்செய்தல், சிவாலய தரிசனம், சிவபூசை, பஞ்சாக்கர செபம், தியானஞ்செய்தல் முதலான சற்காரியங்களைக் கெடுத்து தங்கள் சமயத்துக்குள்ளாக்கினர். அக்கால் திருஞான சம்பந்த சுவாமிகளெழுந்தருளி சோமசுந்தரப்பெருமான் திருவருளைக்கொண்டு சைவசமயமென்கின்ற பயிரிற்படர்ந்துவந்த சமண் சமயமென்னும் முட்களை வெட்டி அச்சமயமென்னும் வேலியில் வைத்தனர். இதுபோலவே திருவாதவூரடிகளும் செய்தது.

ஆகையால் இவர்கள் சமயத்தை யழிக்கவந்தவரல்லர். இவை எதுபோலவெனில், ஒரு குடியானவன் தன் பயிர் நிலத்திற்காதரவாய் சுற்றி முள்வேலியிட்டிருந்தான். அம்முள் அவ்வளவில் நில்லாது படர்ந்து பயிர்நடுவே சென்று பயிர்களுக்கு இடையூறு செய்தது. அதைக் கண்ணுற்ற தலைவன் அம்முட்களையெல்லாம் வெட்டி பழையபடி அவ்வேலியிலேயே வைத்தனன்.

இதுபோலாம் அப்பெரியார்கள் செய்தது.

இ - உ - ம்.

"இறைவி தன் முலைப்பாலயின்ற
சீர்காழிக்கிறைவனு மிறைவனைப்பரிமே
னறைமலர்ப் பொழில் சூழ்மதுரையம்பதியி
னடத்தியவொரு பெருந்தவனும்
புறநிலைச் சமணமாதியைச் செயித்தார்
பொருந்து தெய்விகத்தினிலெவரோ
மறைசொல் சட்சமயத் தொன்றுகொண்டொன்றை
வாக்குவாதத்தில் வெல்பவரே."

—உண்மைநிலயம்.

ஆனதால் சர்வமதமும் இறைவன்றிருவருளை யடைதற்கு வழியாகும்.

இகபோக நிலைமை.

இவ்வுலகத்தில் சரீரமெடுத்த நாம் நூதனமாக அனுபவிப்பதொன்றுங் காணோம். தினேதினே உண்ட ஆகாரத்தையே உண்டும் உடுத்தஆடையையே உடுத்தும் உலகவார்த்தைகளையே வசனித்தும் பத்தினி முதலானவர்களிடத்து கண்ட சுகத்தையே மீண்டு மனுபவித்தும் நம்மாயுள்களெல்லாங் கழிந்தன. ஆனாலிவைகளை யெல்லாந் தினந்தின மனுபவித்தும் இவைகளினுவர்ப்புறுமல் மாயையின் வன்மையால் அப்போதைக்கப்போது நவ நவமாகவே நமக்குத் தோற்றுகிறது. தேகாந்திய காலமும் வந்துவிட்டது. நமனுங்குறுகிறுன்.

இ - உ - ம்

"உண்டதேயுண்டு முடுத்ததேயுடுத்து
மடுத்தடுத்துரைத்ததே யுரைத்தும்
கண்டதேகண்டுங் கேட்டதேகேட்டுங்
கழிந்தன கடவுநாளெல்லாம்
விண்டதாமரைமே லன்னம் வீற்றிருக்கும்
விழவறுவீதி வெண்காடா
அண்டரே போற்ற
வம்பலத்தாடுமையனே உய்யுமாறருளே."

—**திருவெண்காட்டடிகள்.**

ஆகையால் சரீரம் வயோதிக திசையடைந்து கண்கள் பார்வை குறைந்து வாயிலுள்ள பற்கள் விழுந்து எமன் வந்து பற்றுதற்கு முன்னம் இளமைப் பருவத்திலேயே சிவபெருமானைத் திரிகரணங்களாலும் வழிபட்டு திருவருளைப் பெறவேண்டும்.

இ - உ . ம்.

"காய நெகிழாமுன்—கண்களிருளாமுன்
வாயிலுள்ள பல்லும் வழுவாமுன்—காயம் பார்த்
தோடி நமன்வாராமுனுள்ளமே சோணகிரி
நாடிநமவென்றே நட"

—**அருணகிரியந்தாதி.**

சிவபெருமான் தம்மைத் தொழும்படியான அடியார் துன்பத்தைப் போக்குதலே அவர் தொழிலாகும். தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன் தொழிலே என்று வன்றொண்டப் பெருமானும் (தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி) என்று வாதவூரடிகளும் கூறியுள்ளார். ஆனதால்

தம்மை வழிபடு மன்பர்களுக்கு இறைவன் சகல நன்மைகளை யும் அருள்புரிவர். வழிபடாதவர்களுக்கு அருள்புரியார்.

இ - உ - ம்.

"நலமிலனண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங்கரன்" —**திருவருட்பயன்**

நாம் ஞானநூல்களை குருவாயிலாகக் கேட்டு சிந்தித் துத் தெளிந்து உலகமயக்க மொழிந்து இறைவனை வழி படல் வேண்டும். அப்படியன்றி தாம் வாசித்ததை அருத்த நிமித்தம், டம்ப நிமித்தம், பூசா நிமித்தம், புகழ் நிமித்தம், பிறருக்குப் போதித்து தனக்காக்கிக் கொள்ளாத கல்வி பயன் படாது.

இ - உ - ம்.

"கற்றதனுலாய பயனென் கொல்வாலறிவன்
நற்ருெடொழாரெனின்." —**திருக்குறள்**

அன்றியும் உலகத்தில் சிலர் சாத்திரங்களை நன்ருக வாசித்து தாங்கள் சிறிதும் மனுேபந்தத்தினின்றும் நீங் காது பிறருக்குப் போதிக்கும்போது சசவிஷாண வந்தியா புத்திரக கனுரவிந்த மித்தியா புருடன்போல ஜகம் பிராந்தி காலத்திரயத்திலு மில்லவேயில்லை. எல்லாம் பிரம சொரூ பம். நாமும் அந்தச்சொரூபமே யாகும். இதற்கைய மில்லை யென்று சொல்லளவாகப் போதிக்கின்றனர். இவர் ஞான நிலை சிறிது மடைந்திலர். உலகத்தில் சூரியோதயமாகு முன் னம் இருள் நீங்குதல்போல மெய்ஞ்ஞான மடைந்தவர்க ளற் புதம் உலகத்தில் விள்ங்கும். இதற்குச் சான்று கண்ணபிரான் சனகர் முதலானவர்களாகும்.

அன்றியும் ஞான நிலையை யடைந்த மகான்கள் தேகம் தேசி யென்பதை பிரித்து வைத்திருப்பார்கள். எப்படி யெனில் பெரியாராகிய ததீசி முனிவரிடம் இந்திரன் சென்று அவர் முது கந்தண்டெலும்பைக் கேட்க அவர் உடனே தன் சரீரத்தை இந்திரனுக்குக்கொடுத்து தான் சிவ லோகஞ் சேர்ந்தனர். உண்மை ஞானநிலையடைந்தவர்கள் தன்மை யிதுவாகும்.

இ - உ - ம்.

"எல்லோர்க்குங் காலன்றுற வீவனீயாமு
னல்லோர் துறப்பர் தாமுந் தீபற
நன்றறிவார்களென்றுந் தீ பற."

—அவிரோத வுந்தியார்.

வெண்பா.

இ - உ - ம்.

"எல்லோர்க்குங் காலன்றுற வீவனீந்த பிற்கேள்
பல்லோரு மாயந்த மனைப்பாலுடலை—யொல்லையினில்
வைப்பர் சமாதியிந்த வாறவர் செயா முனலோ
ரப்பரி சேதாம் புரிவரால்."

—சித்தாந்த கரணம்.

அன்றியும் சிவபெமான் திருவருளால் பசு கரணங் கெட்டு பதிகரணம் பெற்ற அன்பர்கள் உலகத்தில் இந்திரிய விவகாரம் செய்தாலும் அவர்கள் பதிகரண நிலையே உடையவராவர், எப்படியெனில் ஆற்று நீரானது சமுத்திரத்திற் கலந்து மீண்டுமவ்வாற்றில் ஏறினும் சமுத்திர சம்பந்தமான உப்புநீர் தன்மை போலும். இவ்வகைப்பட்ட பெரியார்

கள் உலகத்தில் பல அற்புதங்களையும் விளக்கிக் காட்டினர். திருஞான சம்பந்த சுவாமிகள் பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியதும், வாகீசர் அரவுவிடந் தீர்த்ததும், சுந்தரர் முதலைவாய்ப் பிள்ளை யழைத்தது முதலான இன்னம் பல அற்புதங்களைச் செய்தனர்.

வெண்பா.

இ - உ - ம்

"பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்
காலனையன்றே விக்கராங்கொண்ட பாலன்
மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்
கரணம் போலல்லாமை காண்"

—**திருக்களிற்றுப்படியார்.**

உலகத்தில் சிவபெருமான் றிருவருளால் மெய்ஞ்ஞான நிலையை யடைந்த மகான்கள் செய்கை இவ்வண்ணம் விளங்கும்.

சமரச நிலை.

உலகத்தில் வேதாந்திகளபிப்பிராயம் வஸ்து ஒன்றென்பது. சித்தாந்திகளபிப்பிராயம் இரண்டென்பது. ஒன்று இரண்டு என்று சொல்லும் வாதம் வேண்டாம். வேதாந்த சித்தாந்த சாத்திரங்களை கற்ற கல்வியளவில் செய்யும் வாதத்தால் பிறவி யொழிந்து பேரின்ப வீடடைவதில்லை.

வெண்பா.

இ - உ - ம்.

"கற்குமடப்பட்டு மிகக் கற்ற வெலாங்கற்றவர்பால்
தற்கமிட்டு நாய்போலாச்சள்ளிடவோ—நற்கருணை
வெள்ளமொடுங்கும் விரிசடையார்க் காளாகி
யுள்ள மொடுங்கவல்லவோ"

—**சிவபோகசாரம்.**

ஆனால் இவ்விரண்டு நிலையும் வீடடைதற்கு ஒற்றுமை யான சமரச நிலையென்று பெரியார்கள் கூறியுள்ளார்.

இ - உ - ம்.

"வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்
நாதாந்த மோன நலமே பராபரமே"

"வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே" —தாயுமானவர்.

இ - உ - ம்.

"சைவ சித்தாந்த மெல்லாந்தானவனாகி நிற்றல்
மையறு வேதசித்த மற்றது நானே யென்ன
துய்வகைக்கிரண்டு மொன்றென்றோதியென் னுயிர்க்கிலாபஞ்
செய்த சற்குரவனீயே திருப்புலி வனத்துளானே"

—சிவஞானவள்ளல்.

அன்றியும் தாம் அடைந்த பேரின்ப நிலையை ஒன்றிரண்டென்று சொல்லுதல் கூறமுடியாதது என பெரியார்கள் கூறியுள்ளார்.

இதுபற்றி கண்ணுடையவள்ளலார் தமது பரமாசாரியராகிய திருஞான சம்பந்த சுவாமிகள் முக்காலுந்தம்மேற் றிருவாணை கூறி முத்தியில் வேதாந்தியைப்போல் ஏகமெனவும் சித்தாந்தியைப்போல் இரண்டென்றுங் கூறுது இங்கனம் கூறுதற்கேதுவாகிய உன்போதத்தை யொழித்து நீ மௌனானந்தமாயிருவென் றருளிச்செய்தார்.

ஒன்றெனில் பெறுவானும் பேறுமின்றாமாகலினும், இரண்டெனில் பதமுத்தியே யன்றி ஐக்கிய முத்தி கூடாதாகலினும், போதவறிவி லிரண்டாயும், போதவொழிவி

லொன்றுயு மிருத்தலினும், ஏகமிரண்டென்னுமல் சும்மா விருவென்று சொன்னுர்.

இ - உ - ம்.

"என்னுணே என்னுணே என்னுணே யேகமிரண்
டென்னுமற் சும்மா விருவென்று சொன்னுன்
திருஞான சம்பந்தன் சீர்காழிநாடன்
அருளாளன் ஞான விநோதன்." —ஒழிவிலொடுக்கம்.

இ - உ - ம்.

"ஒன்றென்று சொல்பவர் சொன்னுலுஞ்
சொல்லுக வோரிண்டா
மென்றென்று சொல்பவர் சொன்னுலுஞ்
சொல்லுக வேத்தியன்பர்
சென்றன்றுநல்கு சிற்றம்பல
நாடி சிரபுரத்தோ
னன்றென்றிதாமென்று சொல்லாத
முத்தி யளித்தனனே." —சிற்றம்பல நாடிகள்.

இ - உ - ம்.

"ஊமர்கண்ட கனவினைப்போ லுரைப்பரிய
சிவானுபவ முணரா நின்ற
காமருஞானிகள் பரவுமுனது சேவடி
நாயேன் காண்பதென்றோ."

—திருப்போரூர் சந்நிதிமுறை.

இ - உ - ம்.

"இனியமுத்தி சுகமிருப்பதெப்படி யென்றேவினவ
வனுபவத்திலறிவிடயானந்தம் போலென்றவரோ."

—கீதாசாரத் தாலாட்டு.

இதனால் வேதாந்த சித்தாந்த சமரசநிலை வேண்டு மென்பது நமக்கு நன்கு விளங்குகின்றது.

அவாவே பிறவிக்கேது.

சரீராந்திய காலத்தில் மனம் எதைப் பற்றுகிறதோ அதே பிறவி வரும். ஆனதால், சரீரமுள்ள இப்போதே சிவபெருமானைத் திரிகரணங்களாலும் வழிபட்டு பற்றை யொழித்தல் வேண்டும்.

சர்வசங்க பரித்தியாகஞ் செய்து மெய்ஞ்ஞானத்தை யடைந்த சடபரதர் ஓர் மானை வளர்த்த வாசனை சரீராந்தி யத்தில் தன்னைப்பற்ற அடுத்த பிறவியில் அவர் மானாகப் பிறந்து அதற்கடுத்த சரீரத்தில் முத்தி யடைந்தனர்.

இ - உ - ம்.

"சாந்தமுடைய சடபரதர் மெய்ஞ்ஞானம்
வாய்ந்திருந்து—மான்வளர்த்த வாதனையாற்
சூழ்ந்தடவி—மானுயவதரித்து மற்றொரு சரீரத்தி
லானாத முத்தியடைந்தார்." —**சிவஞான வள்ளல்.**

"மரிக்கும்போதுன்னும் வடிவினையாவி
பரிக்கு நினைவு பரித்து
ஆதலினாற் சுற்றத்தவரை நினையாதமலன்
பாதம் நினைக பரிந்து." —**சோமவார விரத கற்பம்.**

ஆதலினால் இப்போதே இறைவன்றிருவருளால் பந் தத்தை யொழித்து தேகாந்திய காலத்தில் சிவபெருமா னையே சிந்தித்திருத்தல் வேண்டும்.

இவ்வண்ணம் சிவபெருமானை வழிபடுதற்கு சைவ சமயத்தில் முக்கிய சாதனமாயுள்ளது விபூதி, உருத்திராக்கம், பஞ்சாக்கரமேயாம். இதில் புறச்சாதனம் விபூதி, உருத்திராக்கமாகும். அகச்சாதனமாயுள்ளது பஞ்சாக்கரமேயாம். ஆனலிந்த விபூதி, உருத்திராக்க மகிமையை உபதேசகாண்டம்,பிரமோத்தர காண்டம் முதலான நூல்களிலும், இதன் விரிவை சைவபூஷண சந்திரிகை முதலான நூல்களிலும் கண்டு கொள்வாராக.

இனி அகச்சாதனமாகிய பஞ்சாக்கர விரிவை மேற் கூறுவாம்.

சிவமயம்.

கணபதி துணை.

பஞ்சாக்கர மகிமை

பிரமோத்ர காண்டம்.

கடலால் சூழப்பட்ட காசினியில் சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் மதுனர்மா நகர்க்கிறைவன் தசாருகன் என்னும் பெயர் பூண்டவன். அவன் காசிராஜன் புத்திரியை மணம் புரிந்தான். பின்னர் சதி, பதி இருவரும் பள்ளி யறை சேர்ந்தனர். உட்சென்ற மன்னன் மாரன் கணைக் கிலக்காகி மாதின் கரத்தைப்பற்ற அம்மங்கை பின்னொ திங்கிச் சொல்கின்றாள்."அரசே!உன்னைச் சேருதற்குளனக்கு மனமில்லை. ஒருதலைக்காமம் பொருந்தினர்க்குத் துன்பமே யன்றி யின்பமில்லை யென்றனள்." அது கேட்ட மன்னன் காம நோயால் தன் காதலியைத் தழுவ கருமானுலைக்களத்தில் காய்ந்த இரும்புபோல் தகிக்க நடுக்கமுற்று கைகளை வாங்கிக் கொண்டு மனைவியைப்பார்த்து, "மாதே உன் மேனியிலிருந் துண்டாகிய வெப்பத்தா லென்னுடல் வெந்தது. இதற்குக் காரணமென்னவென" மாது நகைத்துஅரசே! கேள்.பால்யத் தில் எனக்கு தூருவாச முனிவர் பஞ்சாக்கர உபதேசஞ் செய்தனர். அதை யிடைவிடாது செபத்தியானஞ்செய்து வந்ததினால் என் இருவினையும் நீங்கியது. யான் புனிதமாயி னேன். பஞ்சாக்கர மறியாத உனது சரீரம் பாவசரீரம்.

புண்ணியம் பாவத்தைச் சேரா. ஆனதால் நீரிப்போதே பஞ்சாக்கர உபதேசம் பெற்று புனிதமாகி பின்னரெனது மெய்யின்பமடையு மென்று சொல்ல, அப்படியானுல். மாதே அதை நீ யெனக்குபதேசஞ் செய்யென (மாதர் பால் மெய்ம்மொழி மகிழ்நர் கேட்பது நீதியன்று), என மறுத்து கோதாவரி நதிக்கரைவதியும் தவசிரேட்டரான கற்க முனிவரிடம் மன்னனை மாதழைத்துச் செல்ல உடனே இறைவன் முனிவரை மும்முறை வலம்வந்து நமஸ்கரித்து நின்று குருநாதா அடியேன் ஜெனன சாகரத்தினின்றும் கரையேற பஞ்சாக்கர உபதேசஞ் செய்தருளல் வேண்டுமெனப் பிரார்த்திக்க; முனிவர் சந்தோஷித்து தன் கரத்தை அவன் சிரத்தின்மேல் வைத்து விதிப்படி ஐந்தெழுத்தை உபதேசித்தார். அரசனவ் வுபதேசம்பெற்று குரு முன்பாக ஜெபஞ்செய்ய உடனே அவ்வரசனுடைய ரோமத்துவாரங்களினின்றும். அவன் தீவினைகளெல்லாம் அனேகங்கோடி கருங்காக்கை ரூபமாய் மேலெழுந்து பரந்து கரிந்து சாம்பராயின.

இதைக் கண்ணுற்ற அரசன் முனிவரை வணங்கி சுவாமி என் சரீரத்தினின்றும் இக்காகங்களுண்டாகி மேலெழுந்த காரணமென்ன அவைகள் வெந்து. நீறுய்ப் போனகாரண மென்னவென்று வினவ அரசே இதுகாறும் நீ செய்த தீவினையானது உன்னைப்பற்றி இருந்தது. இப்போது பஞ்சாக்கர உபதேசம் பெற்றதால் அவை தங்க இடமின்றி வெளிப்போந்து கரிந்து சாம்பராயின. இனிமேல் தீவினை சம்பந்தம் உன்னைத் தொடராது. இனிமேல் நீயும் உனது காதலியும் நகரஞ்சென்று பஞ்சாக்கரத்தை எக்கால

மும் தியானஞ்செய்து இகபோகங்களை அனுபவித்து தேகாந்தியத்திலிருவரும் சிவபெருமான்றிருவடித் தாமரைகளை யடைவீர்களென்று சொல்ல, அரசனவர்பால் விடைபெற்று நகரஞ் சேர்ந்து அரசுபுரிந்து இகபோகமனுபவித்து அந்தியத்தில் சதி, பதி இருவரும் சிவலோகஞ் சேர்ந்தனர்.

இ - உ - ம்.

"பருதிவந் தெழாவளவு நீடிருளெனப் பவமுஞ்
சுருதியஞ் செழுத்துணர்கலா நாளெலாந் தொடரும்
கருதி நான் மறை யந்தத்தும் வேதத்தின் கண்ணும்
ஒருதனிப் பெருங்கடவுளஞ் செழுத்தலாதுளதோ.
முத்தி நன்னெறிக் கொருதுணை மோகவாரிதிக்கு
வைத்த செஞ்சிகை வடவனல் வினைவனத்திற்குப்
பொததிநுங்கு வெங் கதழெரிபுனைமதிக கண்ணி
யத்தனெந்தையஞ் செழுத்திது கடைப்பிடித்தறிவீர்."

இன்னம் இப்பஞ்சாக்கரத்தின் மகிமையை உபதேச காண்டத்தில் விரிவாய் சொல்லியுளது. ஆனதால் அன்பர்கள் ஆசா்ரியர் வாயிலாக பஞ்சாக்கர உபதேசம் பெற்று இடைவிடாது ஜெபம் தியானஞ் செய்வாராயின் இம்மையில் சகல போகங்களையு மனுபவித்து மறுமையில் இனிப் பிறவா நெறியாகிய பேரின்ப வீடடைவர்.

சிவமயம்.

கணபதி துணை.

பஞ்சாக்கர விளக்கம்.

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சுயம் பிரகாசமாய் பிரம விஷ்ணு முதலான தேவர்கட்கெல்லாம் தலைவராய் விளங்கும் சிவபெருமான் திருநாமமாய் மந்திரங்கட் கெல்லாம் தலைமை பூண்டு விளங்கும் ந.ம.சி.வ.ய. என்னும் ஐந்தெழுத்தாகிய சிவமூல மந்திரமே பஞ்சாக்கர மெனப்படும்.

இம் மந்திரம் சடமாயிருத்தலால் நித்தியமாகிய ஆன்மாவை இரட்சிக்கும் தன்மையுடைய தெங்ஙன மெனில் இம் மந்திரங்களெல்லாம் சிவசத்தியாகரா மெனவும் அச் சத்தியே அம் மந்திரங்களை அதிட்டித்து நின்று பலன் கொடுத்து ஆன்மாக்களைக் காப்பாற்று மென்பது ஆகம வசனம்.

இதனை வாசகம் வாச்சியம் என இருவகையாகக் கூறுவர்.

ஆன்மாக்களுச்சரிக்குமாறு விளங்குவது வாசக மந்திர மெனவும், அதிலதிட்டானமாய் நின்று பலன் கொடுக்கும் திருவருட்சத்தியே வாச்சிய மந்திர மெனப்படும்.

இதனைக் கருடோகம் பாவனையினால் நன்குணரலாம்.

மாந்திரீகனானவன் கருட மந்திரத்தை தினந்தோறும் பயின்று வந்த பயிற்சிவயத்தினால் தன்னறிவு அதன் வயத்தாம்படி அனன்னிய பாவனை செய்து அதிலுறைத்து நிற்கும்போது ஆதியாத்மீக சத்தி வெளிப்பட்டு பலன் கொடுத்தலால் அப் பலன் பெற்றோனாகிய மாந்திரீகன் உலகின்கண் கொடிதாகும் விட வேகங்களை யெல்லாம் நிவர்த்தித்தல் கண் கூடாய் காணப்படுகிறது.

மேலும் இக் கருடனுக்கு மாத்திரமே யன்றி உலகின் கண்ணுள்ள ஏனைப் பறவை விலங்கு மரம் முதலிய பௌதிகப் பொருள் எல்லாவற்றிற்கும் மந்திரங்களுள்ளன வென்றும் அவற்றிற் கெல்லாம் பலன் கொடுப்பது சிவ சத்தியே யாமென்றும் சர்வஞ் ஞானோத்தரம் முதலிய சுருதிகள் முறையிடுகின்றன.

இம் மந்திரங்கள் வேதங்களில் பொதுவகையாகவும், சிவாகமங்களிலும் தமிழ் மறையாகிய தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலான திருமுறைகளில் மிகச் சிறப்பு வகையாகவும் கூறப்பட்டுளது.

வேதம் நான்கினுள் அதர்வண வேதம் ஏனைய மூன்று வேதத்தில் அடங்கியுளது. ஆனதால் முதல் மூன்று வேதங்களுமே விளங்குவன. இவற்றுள் எசுர் வேதம் சிறந்தது. அவை பன்னிரெண்டு காண்டங்களாகப் பிரிந்து எண்பத்திரண்டு பிரசினங்களை யுடையதாய் மாந்திரம் பிராம்மணமென இரு பகுதியாய் விளங்கும்.

அவற்றுள் முதலான மாந்திரமெனும் சம்மிதாபாகமாகிய ஏழுகாண்டங்களுமே மிகச் சிறந்தன. அவற்றுள்

நான்காவதாகிய நடுக்காண்டம் சிறந்தது. அவை ஏழு சம்மிதைகளாய்ப் பிரகாசிக்கும். அவ் வேழினுள் நான்காவதாகிய நடு சம்மிதையின் நடுவே ஸ்ரீ ருத்திராததியாயமென்னும் சத்ருத்திரீய மந்திரம் விளங்கும். அதன் மத்தியில் நாயகத் தன்மை பூண்டு விளங்குவது **ந, ம, சி, வ, ய** எனும் பஞ்சாக்கரமாகும்.

இ - ஃ - ம்

"மும்மறையுள் நடுமறையில் முனிவிலெழு காண்டத்துள்
செம்மை தரு நடுக்காண்டஞ் சேர்ந்தவெழு சங்கிதையில்
அம்மநடுச் சங்கிதையி னுதியிருெழித்து நடுப்
பொம்மனுறவுயர் மனுவின் பொருளாவானெவன்மைந்தா"

அன்றியும் சததகோடி மகா மந்திரங்களும் அனேகமான உபமந்திரங்களும் பஞ்சாக்கரத்தினின்றும் விருத்தியாகி பலவேறு வகைப்பட பிரிந்தனவாம். ஆனதாலிம் மந்திரம் ஆலம் வித்தின் றன்மையை நிகர்ப்பது.

இன்னும் இப்பஞ்சாக்கரமானது ஓங்காரத்துக்கு ஒற்றுமை பூண்டு சூக்கும பிரயோசனகாரமாய் அபேதமுற நிற்றலின் அவ்வுண்மை வெளிப்படுமாறு பிரணவவாச்சியாகிய சிவபிரான் ஓங்காரம் திருவாசியாகவும் அதனுள் சூக்குமாகாரமாக விளங்கும் **ந, ம, சி, வ, ய** என்னும் பஞ்சாக்கரம் அகத்துறுப்பாகவுங் கொண்டு ஞானகாய பரா சத்தியினலதிட்டிக்கப்படும் சுத்தமாயமய சிற்சபையின் கண் நடராஜமூர்த்தியா யெழுந்தருளி நின்று ஆன்மானுக்கிரக நிமித்தம் சிருட்டியாதி பஞ்ச கிருத்தியங்களியற்றுவர்.

இ - உ - ம்.

"ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனி
னீங்கா வெழுத்தே நிறை சுடராம்" எனவும்,
"சிட்டன் சிவாயநம வென்னுந் திருவெழுத்தஞ்சாலே
யவாய மற நின்றுடுவான்" எனவும்
"ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியிலே நகரங்—கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகரு முகம்வா முடியப்பார்" எனவும்
"சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகர
மார்க்கும் யகர மபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனூர்
தங்கு மகரமது தான்" எனவும்
"தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரா—மூற்றமா
யூன்று மலர்ப்பதத்தி லுற்றதிரோ த முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு." —**உண்மை விளக்கம்.**

இ - உ - ம்.

"திருந்துநற் சிவென் றுதறிய கையும்
அருந்தவர் வாவென் றணைத்த மலர்க்கையும்
பொருந்தி லிமைப்பிலி யவ்வென்ற பொற்கையுந்
திருந்தத் தீயாந் திருநிலை மவ்வே
மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய வப்பு மனலுடன் கையும்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென வோதே." —**திருமந்திரம்.**

இனி இவ்வாறே எம்பெருமானது சகள நிட்கள் வடிவாகிய இலிங்கத் திருமேனியை நோக்குங்கால், யகாரம் சிரசாகவும், வகாரம் நாளமாகவும், சிகாரம் மேற்பீடமாக வும், மகாரம் நடுக்காண்டமாகவும், நகாரம் கீழ்ப்பீடமாகவு மமைந்து ஐந்தெழுத்தாகாரமாகவே விளங்கும்.

இ - உ - ம்.

"யகார மிலிங்கமா நாளம் வகாரம்
சிகார மேற்பீடந் தெரிக்கில்—மகாரந்தான்
கண்டமே யாகுங் கவின ரடிப்பீடம்
பண்டிகழு நஃகாமை பார்." —**என்றார் மேலோர்.**

இன்னம் இப்பஞ்சாக்கரமானது பாரமார்த்தீக மோட்ச சாதனத்திற்கு மூலமாயிருப்பது மாத்திரமேயன்றி அவரவரிச்சையின்படி தம்பனம் முதலான அட்ட கர்ம வித்தை முதலிய அபீஷ்ட சித்திகளை யெல்லாங் கொடுத்து லௌகீகார்த்த யோக சாதனத்திற்கு மின்றியமையாது விளங்குதல் அனுபவப் பிரத்தியட்சத்தி னறியப்படும்.

பிரணவத்தை முதற்கண்ணமைத்து பஞ்சாக்கரத்தை சடாக்கரமாகவும், வேதாகம புராண முதலியவற்று ளாங் காங்கு கூறப்பட்டுளது.

இ - உ - ம்.

"ஓதுமக்கர மைந்துருவா முயர் மனுத்தா
னதியிற் பிரணவந்தனைக் கொண்டிடு மதனல்
வேத முற்றினு மாகம மனைத்தினும் விளங்க
வேத மற்றுயர் சடாக்கர மென்றிடப் படுமால்."
—**சித்தாந்த சிகாமணி.**

இந்த **ந-ம-சி-வ-ய** என்னும் பஞ்சாக்கரத்தினுள் நகாரம் திரோதையாகவும், மகாரம் மலமாகவும், சிகாரம் சிவமாகவும், வகாரம் அருளாகவும், யகாரம் ஆன்மாவாகவும் பெறப்படு முறையே ஐந்து பதார்த்தங்களாயிருப்பினும் இவ்வைந்து மிறுதியிலே பதி, பசு, பாசம் என்னும் திரிபதார்த்தமாகவே யடங்கும்.

திரோதான சத்தியானது முத்தி தசையில் அருளாய் விளங்குவதாயினும் பெத்த தசையில் பாசமெனும்படி நிற்றலால் அதனையும் பாசத்தின்பாற் படவைத்து நகார மகாரங்களே பாசமாகவும், சிகார வகாரங்களே பதியாகவும், யகாரமே ஆன்மாவாகவும் விளங்கும்.

இ - உ - ம்.

"அஞ்செழுத்தினி லொருபுடை பதியென வமரும்
வஞ்சமுற்றுள வொருபுடை பாசமாய் வதியும்
துஞ்சலின்றியே நடுவினிற் பசுவெனத் துலங்கும்
அஞ்செழுத்தினின் மும்முத லறிந்தவர் பிறவார்."

—**பஞ்சாக்கர பதி பாசுபாச விளக்கம்.**

இனி இப்பாஞ்சாக்கரமானது சாதக அதிகாரிகளின் பக்குவ தாரதம்மியத்தின்படி சோபானக் கிரமத்தில் முறையே தூலம், சூக்குமம், காரணம், மகா காரணம், முத்தி என்னும் ஐவேறு வகைப்பட நின்று விளங்கும்.

அவற்றுள் மேற்கூறிய பிரகாரம் ஆன்ம வட்சரமாகிய யகாரம் இறுதியிலே நிற்க நகாரம் முதலாக செபிப்பதே தூல பஞ்சாக்கர மெனப்படும். இத்தூல பஞ்சாக்கரம் அவ்

வவரின் சமயாசாரகர்ம அனுட்டானங்களுக்கு இன்றி யமை யாததாய் சமயா சாரியாகிய காரிய குருவினால் யாவர்க்கும் முதலில் உபதேசிக்கப் படுவதாகும்.

சூக்கும பஞ்சாக்கரம்.

இதற்குமேல் நகார மகாரங்கள் இறுதியிலும், சிகார வகாரங்கள் முதலிலும், யகாரம் இடையிலும் நிற்குமாறு செபிப்பதே சூக்கும பஞ்சாக்கர மெனப்படும்.

இச்சூக்கும பஞ்சாக்கரம் தூல பஞ்சாக்கரத்தை முறையே நியமமாக வனுட்டித்து பக்குவ முடையவர்களா யிருக்கும் ஞானதி காரிகளுக்கு மோட்ச சாதனத்தின் பொருட்டு ஞான சாரியராகிய குருவினால் உபதேசிக்கப் படுவதாகும்.

இ - உ - ம்.

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
றேனு யின்னமுத முமாய்த் தித்திக்குஞ் சிவ பெருமான்
றானே வந்தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தா
னூருமுயிர்வாழ்க்கை யொறுத்தன்றேவெறுத்திடவே."

—திருவாசகம்.

இ - உ - ம்.

"நம்முதலா வோதிலருளுடாது, நாடுமருள்
சிம்முதலா வோது நீ சென்று."—உண்மைவிளக்கம்.

"தெள்ளமுதூறச் சிவாய நம வென்று
வுள்ளமுதூற வொருக்காலுரைத்திடும்."

—திருமந்திரம்.

இ - உ - ம்.

"சூக்கும மெண்ணு யிரஞ்செபித் தாலுமேற்
சூக்குமமான வழியிடைக் காணலாம்
சூக்கும மான வினையைக் கெடுக்கலாம்
சூக்கும மான சிவனதா னந்தமே."

—சிவஞானவள்ளல்.

இ - உ - ம்.

"சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொரு நாளு மில்லை." —ஔவையார்.

இதில் சிகாரமாகிய சிவம் ஆனந்தமும், அவ்வானந்தத்தைக் கொடுப்பது வகாரமாகிய அருளும், அவ்வானந்தத்தை வேரற நின்றனுபவிப்பது யகாரமாகிய ஆன்மாவும், அவ்வானந்தானுபவத்திற்குச் சககாரியாயிருப்பது நகாரமாகிய திரோதையும், அவ்வானந்தானுபவம் வளர்வதற்கு இடங்கொடுத்து நிற்பது மகாரமாகிய ஆணவமலமுமா மென்க. (சககாரி—துணை.)

இன்னும் இச்சூக்கும பஞ்சாக்கரமாகிய **சி, வ, ய, ந, ம** என்னும் ஐந்தெழுத்துக்குள்ளே, சிகாரம் சூரியனைப்போலவும், வகாரம் சூரியனொளியைப் போன்றும், யகாரம் கண்ணொளியைப்போன்றும், நகாரம் விளக்கொளியைப் போன்றும், மகாரம் அந்தகாரத்தைப் போன்று மிருக்கும். எனவே சூரியப் பிரகாச மின்மையால் கண்ணொளியானது சிறிதும் விளங்காமல் சர்வமும் அந்தாகாரமாய்த் தோன்றும். இராக்காலத்தில் சிறிதாகிய ஓர் விளக்கொளியான கண்ணொளியைச் சிறிது விளக்கிக் கொண்டிருந்து சூர்யோதயமாத

லும் அச்சூர்யப் பிரகாசத்திலே லயமாகிக் கலந்து நிற்க கண்ணொளியானது சூரியப்பிரகாச சன்னதியில் விளக்க மடைந்திருக்குமாறு போல் யகாரமாகிய ஆன்மாவனது மகாரமாகிய ஆணவத்தினல் மறைப்புண்டு இச்சா ஞானக் கிரியைகள் தோன்ருது பெத்த நிலையிலிருக்குங்கால் நகர மாகிய விளக்கொளியானது அவற்றைச் சிறிது விளங்கச் செய்து இதாகித போக மனுபவித்துச் சிகாரமாகிய சிவோ தயமாதலும், வகாரமாகிய அருளிற் கலந்து அதுவேயாகி யிருக்க, யகாரமாகிய வான்மாவான மகாரமாகிய ஆணவ சத்தியை தனக்குள்ளே அடக்கிக்கொண்டு, வகாரமாகிய அருட் சந்நிதியை அடைந்து அருளும், சிவமும், ஆன்மா வும் ஆகிய வகாரம், சிகாரம், யகாரம் என்னும் மூன்று மாத்திரமேயாய் விளங்கி நிற்குமென்றறிக. அம்மூன்றெழுத் துக்களுள்ளே, சிகார வகாரங்களிரண்டையும் முறையே எதிர் நிறை நிறையாக நிறுத்தி யகாரமானது நடுவே நிற்கு மாறு (விகட கவி) என்பதுபோலத் தொடுப்பதே காரண பஞ்சாக்கரமெனப்படும்.

காரணமெனினும் அதி சூக்குமமெனினும் பொருந் தும். இது யிருவினை யொப்பு மல பரிபாக சத்தினி பாதகர் களாயிருக்கும்மோட்சாதிகாரிகளுக்கு பரமஞானசாரியரால் உபதேசிக்கப்படுவதாகும்.

இ - உ - ம்.

"உடையா னூன்ற னடுவிருக்கு
முடைய னடுவுணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீறு
மிருப்பதானு லடியேனுன்

னடியார் நடுவு ளிருக்கு
- மருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து
முடியும் வண்ணமுன்னின்றே." —திருவாசகம்

இ-உ-ம்.

"அஞ்செழுத்தின் விதி யெவ்வித மென்னி
லரிய தூலமொடு சூக்கும மேவும்
பிஞ்செழுத்தினைத் தள்ளி மேனின்ற
பெரி யெழுத்தினைப் பினுமுனு நிறுவி
எஞ்ச லில்லுயிர் நடுவினி னிலவ
விசைத்தல் காரண மாகு மென்றறிதி
விஞ்சு நல்லரு ளிறையதா மிதனை
விளங்கு பக்குவர்க் கருள்வது விதியே."

—நிஷ்டானுபூதி

இக்காரண பஞ்சாக்கரத்தை இருதலைக் கொள்ளி எனவும் இருதலை மாணிக்க மெனவும் பெரியோர் கூறுவர்.

இ-உ-ம்.

"ஒருதலை மாணிக்க முன்ன
ரெனக் குபதேசஞ் செய்தான்
இருதலை மாணிக்கம் பின்னரும்
பேசி யிருளறுத்தான்." —சிவஞானவள்ளல்

ஒருதலை மாணிக்கம் ஒருதலைக் கொள்ளி யென்பது சூக்கும பஞ்சாக்கரத்தையும், இருதலை மாணிக்கம் இருதலைக் கொள்ளியென்பது காரண பஞ்சாக்கரத்தையு மென்க.

இனி இக்காரண பஞ்சாக்கரமாகிய சிகார, வகார, யகாரங்களுள்ளே, யகாரமாகிய வான்மாவானது சிகார மாகிய சிவத்தினில் வகாரமாகிய வருளிலே லயப்பட்டு நிற்க, அருளும் சிவமுமாகிய வகாரம், சிகாரம் இரண்டு மாத்திர மாய் நின்று விளங்குவதே மகா காரண பஞ்சாக்கர மெனப் படும். இம்மகா காரண பஞ்சாக்கரம் பஞ்சருத்திரர் களுட்பட சுவேதா சுவதரோப நிடதத்தும் பிருகு தாரணி யோப நிடதத்திலும் கடவல்லியுப நிடதத்திலும் துரியப் பிரமத்தினது திரு நாமமாகத் தொனிக்கப்பட்டு விளங்கு கின்றது. இஃது தென்மொழிச் சுருதி வழக்கின் கண்ணே முதல் நீண்டு வாசி எனவும், வடமொழிச் சுருதி வழக்கின் கண்ணே யிறுதி நீண்டு வ, சீ யெனவும் வந்து ஓசை பயப் பதாகி விளங்கா நிற்கும்.

இ. உ. ம்.

"வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு." —**திருவருட்பயன்.**

இ. உ. ம்.

"வாசிவா வென்று வாசியை வைத்து
வாசியோ டொன்ற வகையறி வாரில்லை
வாசியோ டொன்ற வகையறி வாளர்க்கு
வாசியோ டீசன் மகிழ்ந் திருந்தானே." —**திருமந்திரம்**

இம்மகா காரண பஞ்சாக்கரமாகிய வாசி யென்னும் துரிய மந்திரமே வர்ண விபரியமுற்று ஆண், பெண், அலி என்னும் முப்பாற் பொருளும் பெறப்படுமாறு அதீதப்

பொருளாய் நின்ற பரப்பிரமத்திற்கு யோக விசேட நாமமா யமைந்து சிவ யென விளங்கி நிற்பதாகும்.

இ - உ - ம்

"சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே." —**திருமந்திரம்.**

இனி இம்மகா காரண பஞ்சாக்கரமாகிய சிகார வகா ரங்க ளிரண்டினுள் வகாரமாகிய அருளையும் தன்னிடத்து லயப்படுமாறு அடக்கிக்கொண்டு, சிகாரமாகிய பதியெழுத்து மாத்திரமாய் தனிப்பட நின்று விளங்குவதே முடிவாகிய முத்தி பஞ்சாக்கர மெனப்படும். இதனையே இறை யெழுத் தெனவும், பெருவெழுத் தெனவும், பிரம பீஜமெனவும், மகாமனு வெனவும், நாயோட்டு மந்திரமெனவும் மேலோர் பரிபாஷையாக வழங்குவர். இப்பஞ்சாக்கர மகா மந்திரத் தின் பிரபாவம் அதனைத் தாமாகக் கலந்தனுபவிக்கும் சிவன் முத்தர்களாகிய சிவஞானிகளாலறிதற்பாலதேயன்றி ஏனைய அபக்குவ ஆன்மாக்களால் அணுத்துணையேனு மறிந்திடற் பாலதன்றாம்.

இ - உ - ம்.

"நாயோட்டு மந்திர நான்மறை வேதம்
நாயோட்டு மந்திர நாதனிருப் பிடம்
நாயோட்டு மந்திர நாதாந்த சோதி
நாயோட்டு மந்திர நாமறி யோமே." —**திருமந்திரம்.**

சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் எனும் ஞானேந்திரியம் ஐந்தினுள் ஏனைய நான்கிந்திரியங்களும் நேத்திரேந்திரியத்திலடங்குமாறுபோல நகார, மகார, சிகார, வகார, யகாரம் என்னும் ஐந்தினுள் ஏனைய நான்கட்சரங்களும் முறையே லயக்கிரமமாகச் சிகாரமாகிய சிவத்தினிடத்து ஒடுங்கியிருத்தலே வேத உபநிடத் சார சிவாகமாந்த சித்தாந்தக்கிரமமென்றுணர்க.

இ - உ - ம்.

"நகரமொடு மகரமது சடந்தரும் காரணமா
நாடுமவை நீங்கியிடு வகையை நவிலுதுங்கேள்
வகரமதி னகரமுதல் யகரத்திற்றனே
மகரமு நீங்கிடு மரிய சிகரமது தன்னால்
யகரலயம் வகரமுந்தான் சிகரத்திலொடுக்க
மாகு மிறை நீங்கவுயிர் முத்தியெய்து மென்றே
தகர நறுங் கரியகுழ னகமாதுக்கிறைவன்
றனது திருவுளமகிழ்ந்து சாற்றின னன்குணர்ந்தே."

—நிஷ்டானுபூதி.

இவ்வண்ணங்கூறிய தூலம் முதலான பஞ்சாக்கரமைந்தினுள் முதற்சொன்ன தூல சூக்கும காரண மென்னு மூன்றும் தனித்தனியே ஐந்தைந்து வகையினவாகக் கணிக்கப்பட்டு போக யோக சாதன நெறியில் ஒவ்வொன்றும் பல வேறு வகைப்பட விரிந்து விளங்கும். இவை யாவும் தம்தம் சாதனனு சந்தான நிலையில் ஆசிரியர்பாலறியற்பாலனவாகும்.

இப்பஞ்சாக்கரத்தின் பெருமையை உபமன்ய முனி

வரை கிருஷ்ணமூர்த்தி கேட்ட காலத்து எவ்வளவு காலம் சொன்னாலும் முடிவுறப் பேசுதற்கியலா வென்றப் பெரியார் திருவாய் மலர்ந்தருளினரெனில் உலகத்தில் சிற்றறிவுடைய நம்போல்வார் அதன் பெருமையை முடிவுற வெடுத்துப் பேசுதல் எங்ஙனங்கூடும் ?

பிரம விஷ்ணு முதலான தேவர்கட்கெல்லாம் சிவ பிரான் தலைவராய் விளங்குதல்போல் வேதாகம உபநிட தங்களிலெல்லாம் மந்திரங்கள் பலவற்றுள்ளும் முதன்மை யாக விளங்குவது சிவமூல மந்திரமாகிய பஞ்சாக்கரமேயா மென்றுணர்ந்து கடைப் பிடிக்கவும்.

சங்கிரகம்.

சிவபெருமானை வழிபட்டு பேரின்ப வீடடைய விருப் புறும் நாம் உலக விவகாரத்தை சுருக்கிக்கொள்ளல் வேண் டும். பயனில் மொழி புகலலாகாது. நல்லோர் சேர்க்கையே எப்போதும் வேண்டும். வஞ்சக எண்ணம் உதவாது. அவர்க்கு இறைவன் அருள் புரியார். ("கரவாடும் வன்னெஞ் சர்க்கரியானை கரவார் பால், விரவாடும் பெருமானை") என்றார் தமிழ் மறையில். அன்றியும் கோபத்தை முற்றுமொழித்து சாந்தமே பூடணமாகக் கொள்ளல் வேண்டும். அன்றியும் குடும்பத்தில் பூசை அறை ஒன்று தனியாக யிருத்தல் வேண் டும். அதில் நடராஜர், ஸ்கந்தர், கணபதி முதலான படங் களை அமைத்தல் வேண்டும்.

நாம் நித்தியப்படி ஸ்நானம்செய்து பூசை அறைக்குச் சென்று அனுட்டான முடித்து சிவபெருமான் விநாயகர்

முதலான மூர்த்தங்களை பூசைசெய்தல் வேண்டும். அனுட்டான முடிவில் பஞ்சாக்கர செபம் ஆயிரத்தெட்டு செய்தல் வேண்டும். பூசை முடிந்த பின் தேவார திருவாசக பாராயணஞ் செய்தல் வேண்டும். பிறகு சிவாலயஞ் சென்று விதிப்படி சிவதரிசனஞ் செய்து போஜனஞ் செய்தல் வேண்டும்.

(மூர்த்தி உபாசனை-பஞ்சாக்கரதியானம்) சொல்லும் இந்த தியான நிலைக்கு மௌன நிலை அவசியம் வேண்டும். (மோனமென்பது ஞானவரம்பு) என்றார் நரை மூதாட்டியாரும். நடராஜர், கந்தர், கணபதி முதலான மூர்த்தங்களை மனதின் கண் நிறுத்தி புறத்தில் செய்யும் பூசையைப்போல் அகத்திலும் செய்தல் வேண்டும். புறத்தில் செய்யும் பூசையைக் காட்டிலும் மானதமாகச் செய்கின்ற பூசை பல்லாயிரம் பங்கு மேலாகும்.

மேலும் இம்மூர்த்தத்தையே சதா தியானித்தல் வேண்டும். ஆண்பாலார் சிவபெருமான் முதலான மூர்த்தங்களையும், பெண்பாலார் பராசத்தி முதலான மூர்த்தங்களையும் தியானிப்பது மிக்க நன்று. கற்புடைய நாயகியானவள் தன் நாயகன் திருநாமத்தைபிறர் கேட்கப்புகலாமலும், உள்ளத்தின் கண் சதாகாலமும் மறவாமல் நினைத்திருப்பது போல நாம் இறைவன் திருநாமத்தை பிறர் கேட்கப் புகலாமலும், உள்ளத்தின் கண் எப்போதும் தியானித்திருத்தல் வேண்டும். தியானஞ் செய்யும்போது பஞ்சாக்கரத்தை புருவமத்திய ஸ்தானத்தில் நிறுத்தி தியானித்தல் வேண்டும். சூக்கும பஞ்சாக்கர தியானம் மேலாகும். அதனி

னும் காரண பஞ்சாக்கர தியானம் சிறந்ததாகும் பந்த நிவாரணஞ் செய்ய விரும்புவோர்க்கு இது நன்று. மகா காரண பஞ்சாக்கர தியானம் அதனினும் உத்கிருஷ்டமாகும். முடிவாகச்சொல்லப்பட்ட முத்தி பஞ்சாக்கரம் சுவானுபூதி நிலையில் நிற்கின்ற மெய்ஞ்ஞானிகளால் அனுபவிப்பதாகும்.

முன் சொல்லப்பட்டப் பஞ்சாக்கரத்திற்கு பிரணவத்தை முதலிலே யமைத்து தியானித்தல் வேண்டும். இப் பஞ்சாக்கர உபதேசத்தை ஞானகுரு வாயிலாகப் பெறல் வேண்டும். சொல்லப்பட்ட தியானம் முதலானவைகளெல்லாம் ஏகாந்த ஸ்தானத்திலிருந்து செய்தல் வேண்டும்.

காயத்தால் செய்யும் பூசை முதலானதும், வாக்கால் செய்யும் தோத்திரம் முதலானதும், மனத்தால் செய்யும் மூர்த்தி யுபாசனை, பஞ்சாக்கரதியானம் முதலானதும் தவறுதலின்றி தினம் தினம் செய்துவரல் வேண்டும். யாதொன்றையும் விகற்பியாது நிருவிகற்பமாய் காணும் பாலர்போலும், வைதாரையும் வாழ்த்தினரையும் சுட்டியறியாத பெரும் பைத்தியக்காரன் போலும், நித்திரை செய்பவன் கையில் பிடித்திருந்த பாக்குப்போலும், தற்போத மொழிந்து நினைவிற் சுழுத்தி நிலையாய சிவஞானம் வந்தவிடத்து மேற்சொன்ன செபம் தியானம் முதலானவைகளெல்லாம் தானே நழுவிவிடும். அப்படியன்றி சொல்லளவில் ஞானம் பேசி மேற்சொன்னவைகளை விடுவோர் நெடுங்காலம் நிரயத் துன்பத்து நீங்காதழுந்துதல் நிச்சயம்.

இ - உ - ம்.

"ஞால நீதியும் நான்மறை நீதியும்
பால ருன்மத்தர் பசாசரி லெனவும்
உறங்கி ஞேன்கை வெறும்பாக் கெனவும்
தானே தவிரா தாஞற் புரியா
தொழிந்திடி னிரயத் தழுந்துத றிடமே."

—சங்கற்ப நிராகரணம்.

அன்றியும் சிவம் முன்னுக விதிப்படி யுச்சரிப்பதாய பஞ்சாக்கரத்தால் சிவபெருமான் றிருவடியை யருச்சனை பண்ணி திருவடி யடைந்த மெய்யடியார்க் கடிமை பூண்டு பணிவிடை செய்யின் பஞ்சமலங்களுமறும். மேற்சொன்ன சிவானுபவமுங் கைகூடும்.

இ - உ - ம்.

"தாமருந்தல்போலத்—தமைச்சிவனுக் கூணுக்கித்
தாமருளாலுண்டு பரைதாமாகித் தாமழிய—
வஞ்செழுத்தாலர்ச்சித்—தடியார்க்கடிமை செயிற்
பஞ்சமலத் தொத்தறுமப்பா." —ஒழிவிலொடுக்கம்

"செம்மலர் நோன்ருள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே"

—சிவஞான போதம், கஉம் சூத்திரம்

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப் பொருளாவது
நாத நாம நமச்சிவாயவே" —**தேவாரம்.**

"சொல்லால்வருங்குற்றஞ் சிந்தனையால்வருந்தோடஞ்செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணிய நூ
லல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகளாயவு மற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே"

ஈசுர வழிபாடு,

பஞ்சாக்கர விளக்கம் முற்றிற்று.

மனோரஞ்சினி அச்சுக்கூடம், சௌகார்பேட்டை, சென்னை.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
III	6	கடின தன்மை	கடினத்தன்மை
	10	கண் உண்டாம்	கண்ணுண்டாம்
IV	6	இப்படி	இப்படிச்
VI	19	பாகிங்	பாங்கி
VII	8	பூணணிந்து	பூணணிந்த
	11	தருக்கிஞைங்	தருக்கிஞ
IX	7	வாயந்	வாய்ந்
XIII	16	மரணம	மரணம்
XVIII	17	தொடக்கி	தொடங்கி
XIX	6	மனைவியைக்	மனையைக்
2	1	மாதவம்	மாதவப்
	2	யொத்திரு	யொத்த
5	25	பண்ணுதல்	பண்ணுதல்
13	1	மிருப்பின்	மிருப்ப்ன்
14	4	கண்ணு	கண்ண
	6	பத்தி	பக்தி
15	2	மாவரதி	மாவாதி
	20	மனம்மொழி	மனமொழி
17	5	தியானமென	தியானமென்
	15	சைவ	சைல
	23	ளுப்பு	ளும்
23	11	நிற்ள்ன்ற	நிற்கின்ற
29	22	விளங்கும்	விளங்கும்
30	18	சிவபெமான்	சிவபெருமான்
33	19	போரூர் சந்நிதி	போரூர்ச்சந்நிதி
38	6	தவசிரேட்ட	தவச்சிரேட்ட
42	11	கெ்ல்லாம்	கெல்லாம்
43	3	ருத்திராதி	ருத்திராத்தி
46	16	பாசபாச	பசுபாச
47	15	ளுரு	னுளுரு
49	3	ஆன்மாவ	ஆண்மாவா
51	11	வாசி எனவும்	வாசியெனவும்
52	17	அபக்குவ ஆண்	அபக்குவாண்
53	1	ஆக்கிராணம் எனும்	ஆக்கிராணமெனும்
	6	உபநிடத்	உபநிடத
	8	பூணணிந்து	பூணணிந்த

மேற்கோள்களாக எடுத்தாளப்பட்ட நூல்கள்

1. தாயுமானவர்
2. சிவஞான சித்தியார்
3. பேரூர்ப்புராணம்
4. இகபோகசாரம்.
5. சிவஞானவள்ளல்
6. குறுந்திரட்டு
7. அனுபவசாரம்
8. திருவிளையாடல்
9. தேவாரம்
10. திருக்குறள்
11. ஞானவாசிட்டம்
12. சூத சங்கிதை
13. குசேலோபாக்கியானம்
14. அஞ்ஞவதைப்பரணி
15. நீதிவெண்பா
16. சிவானந்தமாலை
17. திருமந்திரம்
18. பிரமோத்தரகாண்டம்
19. பரமரகசிய சதுட்டயம்
20. வீராகமம்
21. கைத்தலமாலை
22. சோணசைலமாலை
23. சித்தாந்த சிகாமணி
24. சிற்றம்பல நாடிகள்
25. திருவாசகம்
26. பொன்வண்ணத்தந்தாதி
27. சிதம்பர மும்மணிக்கோவை
28. பெரிய புராணம்
29. ஔவைக்குறள்
30. சித்தாந்த கரணம்
31. திருப்போரூர்ச் சந்நிதி [முறை
32. திருவிசைப்பா
33. திருவருட்பா
34. உண்மை நிலயம் [பாடல்
35. திருவெண்காட்டடிகள்
36. அருணகிரியந்தாதி
37. திருவருட்பயன்
38. அவிரோத வுந்தியார்
39. திருக்களிற்றுப்படியார்
40. சிவபோகசாரம்
41. ஒழிவிலொடுக்கம்
42. சிற்றம்பலநாடிகள்
43. கீதாசாரத்தாலாட்டு
44. சோமவாரவிரத கற்பம்
45. பஞ்சாக்கர பதிபசுபாச
46. நிஷ்டானுபூதி [விளக்கம்
47. சங்கற்ப நிராகரணம்
48. சிவஞானபோதம்
49. வைராக்கிய சதகம்
50. நல்வழி

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 30349

பிழை திருத்தம்.

இதனையும் அவ்வப் பக்கங்களில் திருத்திக்கொள்க:

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
I	6	வருந்தப்	வருந்தவப்
III	1	தங்கி	தங்கிப்
III	23	யீசுர	ஈசுர
IV	6	கர்ப்ப	கருப்ப
VIII	15	தூண்டு	தூண்டில்
VIII	17	ஸ்ரீகள்	ஸ்திரீகள்
IX	24	பின்னிறுந்தி	பின்னிறுக்கிப்
X	7	ஓர்	ஒரு
XII	25	காலத்	கால
XIX	19	நளாகினி	நளாயினி
1	9	மன்பர்	மன்பர்தம்
1	12	புனிதன்	பூவார்
1	16	யூர்தியை	யூர்தியைத்